Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா

சுடர் :35 கதிர் :16 கார்த்திகை 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை 13 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

முச்சந்தி முரளி



" உவர் சொல்லுறத நம்பலாமோ? இல்லாட்டி பழைய குருடி கதவைத் திறவடி கதைதானோ...?"

# கருத்துச் சுதந்திரத்தில் கை வைக்கேன்!

## ஜனாதிபதி உறுதி



கொழும்பு, டிசெம்பர் 13

எனது ஆட்சிக்காலத்தில் ஊடகங்கள் மீதான கருத்துச் சுதந்திரத்தில் எப்போதும் கைவைக்க மாட்டேன் என்று தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. அதேநேரம், ஊடகங்கள் அரசு மீது வக்கிரத்தன்மையுடன் முன்வைக்கும் கருத்துக்களை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கையை முன்வைத்தார். இலங்கையில் உள்ள அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்படி கருத்தை அவர் முன்வைத்தார்.

23

## மீண்டும் ஆவா?

### மானிப்பாயில் பட்டப்பகலில் கைவரிசை

*யாழ்ப்பாணம், டிசெ.13*

மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் வீடொன்றுக்குள் நேற்று நண்பகல் புகுந்த ஆயுதக் குழுவொன்று வீட்டின் உடமைகளை அடித்துச் சேதமாக்கியுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் இலக்கத்

23

## காய்ச்சலா? குருதிப் பரிசோதனை கட்டாயம்

*யாழ்ப்பாணம், டிசெ.13*

வடக்கில் டெங்குத் தாக்கம் நிலவுகின்ற காரணத்தால் காய்ச்

23

## மணல் அகழ்வில் ஈடுபடுவோரை உடன் கைதுசெய்து முற்படுத்துக

*பொலிஸாருக்கு நீதிபதி யூட்சன் உத்தரவு*

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

தீவகம் மண்கும்பானில் மண் அகழ்வில் ஈடுபட்ட நபர்களை உடனடியாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உயர்மட்ட அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணியவேண்டாமென்றும் பொலிசாருக்கு ஊர்காவற்துறை நீதிபதி யூட்சன் உத்தரவிட்டார்.

மண்கும்பான் பகுதியில் சட்டவிரோத

23

## சுவிஸ் தூதரக அதிகாரியை சிறைவைப்பதற்கு முயற்சி?

சுவிஸ் தூதரக பணியாளர், பொய்யான குற்றச்சாட்டை முன் வைத்தார் என சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அரசு தயாராகி வருகிறது என்று கூறப்படுகிறது. (விரிவு பக். 21)

## கமாலுக்கு போர்க்கொடி






*வவுனியா, டிச. 13*

பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ன நேற்றையதினம் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில், அவரின் வருகையைக் கண்டித்து வவுனியாவில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்

23



கருத்தோவியம்: காண்டி

## 'கவனிப்பில்' முடிந்த கவனவீர்ப்புப் போர்

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

தென்மராட்சி - சாவகச்சேரி, மறவன்புலவு பகுதியில் மின் காற்றாலை அமைக்கும்

23

## பட்டம்விட்டு விளையாடிய மாணவன் பரிதாபச் சாவு

*வடமராட்சி, டிசெ. 13*

பட்டம்விட்டு விளையாடிய மாணவன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 17 வயதுடைய

23



DFCC கார்ட் மூலம் சகல பரிசுப் பொருட்களையும் கொள்வனவு செய்து இப்பண்டிகைக் காலத்தை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுங்கள்!

கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்டுகளுக்கு

50% வரையிலான சேமிப்பை அனுபவியுங்கள்.

ஒவ்வொரு DFCC கிரடிட் கார்ட் கொள்வனவிற்கும் 1% பண மீளளிப்பு

மேலதிக விபரங்களுக்கு பிரவேசியுங்கள்: www.dfcc.lk/promotions

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

# தமிழர் பிரச்சினையை கோத்தாபய தீர்க்கார்!

## அதற்கான எண்ணமே அவரிடமில்லை என்று கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, டிசெ. 13

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் கோத்தாபய ராஜபக்ஷவிடம் இல்லை என்று திமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவருடைய ஒதுக்கீட்டில் பூநகரி வாடியடி சந்தைக் கட்டடத்தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பதவியேற்ற நாளிலிருந்து சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் மட்டுமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன் என்ற மமதையில் இப்போது வரை கூறிக்கொண்டிருக்கின்றார். வடக்கு மாகாண ஆளுநரைக்கூட தெரிவுசெய்ய மனம் இல்லாதவர் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பாரா?

13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் விடயங்களை நடைமுறைப் படுத்த முடியாது என்று இந்தியாவில் வைத்தே கூறியவர், எமக்கு அதிகாரங்களைத் தருவாரா? எமது மக்களின் இலட்சக்கணக்கான கொலைகளுக்குக் காரணமான ஒரு போர்க்குற்றவாளியாக இருக்கும் அவர், எம்மை அரவணைத்துச் செல்லும் மனப்பாங்குக்கு வரவில்லை.

எமக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்றால் எமது அபிவிருத்திப் பணிகளை நாம் சுயமாகவே மேற்கொள்வோம்- என்றார்.

பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உபதவிசாளர், பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச சபைச் செயலர், சபை உறுப்பினர்கள், சந்தை வர்த்தகர்கள், பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர். (நு-6)

## நல்லூர் சபையின் பாதீடு மீண்டும் திருத்தங்களுடன்

யாழ்ப்பாணம், டிசெ. 13

நல்லூர்ப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் திருத்திய மைக்கப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சபையின் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச சபையின் 21 ஆவது மாதாந்த அமர்வு சபை மண்டபத்தில் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்றது. தவிசாளர் சபைக்கு அறிவித்தல்களை வழங்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நல்லூர்ப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த அமர்வில் சபை உறுப்பினர்களின் ஆதரவு போதாமை காரணமாகத் தோல்வியடைந்தது.

சபை உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய மீண்டும் திருத்தங்கள் செய்ய உறுப்பினர்களுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டும் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

நல்லூர்ப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றபோது இரு வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 7 உறுப்பினர்களும், எதிராக 9 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

2 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். இந்தநிலையில் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீண்டும் திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(நு-7)






## சுசீந்திரராஜாவின் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,டிசெ.13

பேராசிரியர் சு.சுசீந்திர ராஜா நினைவுப் பேருரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மொழியியல் துறை மற்றும் ஆங்கிலத் துறைத் தலைவர் மூத்த விரிவுரையாளருமான விமல் சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பெ.மாதையன் நினைவுப் பேருரையாற்றினார். "ஆரம்ப காலங்களில் தமிழ்மொழி பற்றி வெளிவந்த ஆய்வுகள் யாவுமே ஆங்கில மொழியிலேயே காணப்பட்டன. அந்த நிலையை மாற்றிய தமிழின் தனித்துவத்தையும் தமிழ் அகராதிகள் உருவாக்கத்திலும் அளப்பரிய சேவை செய்தவர் சுசீந்திர ராஜா" என்று அவர் தனது நினைவுரையில் தெரிவித்தார். நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராகப் பேராசிரியர் சுபதினி ரமேஸ் செயற்பட்டார். நன்றியுரையை கவிதா நவகுலன் தெரிவித்தார். (க)

## வவுனியா வடக்கு பாதீடும் தோல்வி

வவுனியா,டிசெ.13

வவுனியா வடக்குப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

வவுனியாவடக்குப்பிரதேசசபையின்மாதாந்தஅமர்வு தவிசாளர்இ.தணிகாசலம்தலைமையில்நேற்றுஇடம்பெற்றது.

இதன்போது சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி,ஐக்கிய தேசியக் கட்சி,பொதுஜன பெரமுன, சுஜேட்சை குழு ஆகியவற்றைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் சமூகமளித்திருக்கவில்லை.

இதன்போது வரவு செலவுதிட்ட விவாதம் இடம்பெற்று வாதப்பிரதிவாதங்கள்கடுமையாகஇடம்பெற்றன. வரவு செலவுத்திட்டத்தில்தவிசாளர்தனதுபகுதிக்கேமுக்கியத்துவம் வழங்கியதுடன், மக்கள் சார்பான வேலைத்திட்டத்துக்குப் போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்று உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதனால் வரவு செலவு திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பாதீடுக்கு எதிராக தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கியதேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி,தமிழ் தேசிய மக்கள் முன்னணி,சுஜேட்சை குழு ஆகியவற்றைச்சேர்ந்த17 உறுப்பினர்கள்வாக்களித்தனர். பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த 7 பேர் வாக்களித்தனர்.

தமிழ் கூட்டமைப்பைச்(ரெலோ) சேர்ந்த சபையின் உபதவிசாளர் யோகராயா நடுநிலைமை வகித்திருந்தார். இதனால் சபையின் பாதீடு பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றுத்தோல்வியடைந்தது. (க-110,422)

## ராஜபக்சக்களின் ஆட்சியில் அதிகாரமற்ற அமைச்சர்கள்

கொழும்பு, டிசெ. 13

நாட்டின் மிக முக்கியமான 50 நிறுவனங்கள் ராஜபக்ஷக்களிடையே பிரிக்கப்பட்டுள்ளன. 38 அமைச்சர்கள் அதிகாரங்கள் அற்றவர்களாக எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் ஓய்வூதியம் மற்றும் சலுகைகளைப் பெறுகின்றனர் என்று தெரிவித்துள்ளார் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான். ஐ.தே.க தலைமையகமான சிறிகோத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: புதிய அரசு வெளியிட்டுள்ள அமைச்சுக்கள் தொடர்பான வர்த்தமானியில் பாதுகாப்பு அமைச்சு முப்பது திணைக்களங்களை தனக்கு கீழ் கொண்டுள்ளது. எங்கள் நல்லாட்சியில் சிவில் விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் துறைகளை நாங்கள் வகைப்படுத்தியிருந்தோம். தற்போது, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், தேசிய ஊடக மையம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயலகம், வானிலை ஆய்வு மையம் மற்றும் இலங்கை காவல் துறை ஆகியவை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. முப்பது நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் யார் என்பதை அரசு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். 19ஆவது திருத்தத்தின்படி, ஜனாதிபதியால் அமைச்சரவை பதவியில் இருக்க முடியாது. ஜனாதிபதி நாட்டின் தளபதி. அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சர் இருக்கிறார். ஆனால் இந்த நிறுவனங்கள் எதுவும் அவருக்கு கீழ் வர்த்தமானி செய்யப்படவில்லை. அவர் பாதுகாப்பு அமைச்சர் மட்டுமே. நாட்டின் மிக மதிப்புமிக்க நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வர்த்தமானி செய்யப்பட்டிருந்தாலும், அவற்றுக்கு யார் பொறுப்பு என்று நாம் யோசிக்க வேண்டும். ஜனாதிபதிதான் பாதுகாப்பு அமைச்சரா அல்லது வேறு யாராவது ஒருவர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டாரா? பாதுகாப்புக்கு யார் பொறுப்பு என்பது தெளிவாக இருக்க வேண்டும் - என்றார்.

(ம)

# எல்லைச் சிக்கலால் இரு கிராமங்களில் பதற்றம்





மன்னார், டிசெ. 13

மன்னார் மடு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பூசாரியார் குளம் கிராமத்துக்குச் சொந்தமான பல ஏக்கர் காணிகளை அபகரிக்க நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி மக்களின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தப்பட்டது.

தமது கிராமத்து நிலப்பரப்பை அயல் கிராமமான மதீனா நகர் கிராம மக்கள் அபகரிக்கின்றனர் என்று பூச்சியார்குள கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நேற்றைய காணி அளவீட்டு நடவடிக்கையில் இரு கிராம மக்களுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ல்ஸ் நிர்மலநாதன், மற்றும் சிவமோகன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர். மடு பிரதேசச் செயலாளரும் குறித்த இடத்துக்கு வந்து பகுதியில் காணி தொடர்பில் மேற்கொண்ட அளவீடுகளை நிறுத்தினார்.

(ம-56)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவமணி சுந்தரலிங்கம் (சிவம்)

(பிரபல சிங்கள ஆங்கில ஆசிரியர், முன்னாள் ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்)



ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி சுந்தரலிங்கம் நேற்று **(12.12.2019)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், அன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர், இலங்கை மின்சாரசபை) அவர்களின் மனைவியும், பகீரதன் (அரச முகாமைத்துவ உத்தியோகத்தர், உதவி பதிவாளர் நாயக திணைக்களம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயும் சதீனா அவர்களின் அன்பு மாமியாரும் இராமச்சந்திரன் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் சண்முகநாதன் (இயக்குனர், புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்), திலகமணி, செல்வராஜா (உத்தியோகத்தர், புதிய உயர் கல்லூரி), பத்மநாதன் (இயக்குனர்- பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம், சுன்னாகம், **BARATHY INSTITUTE**- சித்தன்கேணி), மோகனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நவமணி நவமணிதேவி மற்றும் அருள்நங்கை (விரிவுரையாளர்- புதிய உயர் கல்லூரி), ஞானக்கொழுந்து (முன்னாள் உத்தியோகத்தர்- *Srilanka Telecom*), வசந்தராணி, சகிலா (முன்னாள் உத்தியோகத்தர்- கொமர்ஷல் வங்கி), தம்பிராஜா, காலஞ்சென்ற பரமேஸ்வரி, புவனேஸ்வரி, கனகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவராஜா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் சஜித் அவர்களின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(13.12.2019)** வெள்ளிக்கிழமை பிற்பகல் **1.00** மணியளவில் ஏழாலை மேற்கு ஏழாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார, உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T.P:- 077 990 0041, 077 715 0351** தகவல்:- **S.பகீரதன் (மகன்)**

## மரண அறிவித்தல்



### செபஸ்ரியன் பெர்ணாண்டோ இராசதுரை

(Retired Chief Clerk - Colombo & Secretary - Saudi Arabia)

சுண்டுக்குழி கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும்,இல.83, கீரிமலை வீதி, சண்டிலிப்பாய், கொழும்பு, சவூதி அரேபியா, லண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் பெர்ணாண்டோ இராசதுரை கடந்த **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் (Baby) பாசமிகு கணவரும் மனோகரன் (Texas, U.S.A), சந்திரசேகரன் (Baba- Canada), மனோகரி (Pakistan), சுதாகரி (London) ஆகியோரின் அன்பு தந்தையும் Dr.Uma (Texas, U.S.A), நிரஞ்சனா (Canada), அசோகன் (Pakistan), ரமணன் (London) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற டெய்ஸி மற்றும் நீற்ரா ஜெயரத்தினம், காலஞ்சென்ற சைமன் சின்னராசா, குயின் (Canada), வில்லியம் சற்குணராசா (France) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் காலஞ்சென்ற கனகராஜசிங்கத்தின் அன்பு மைத்துனரும் சைலஜன், சாருஜன், நிருஜன், பியோஜினி, பெலீசியன், சாருசன், தாருஜன், மயூரி ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் **(16.12.2019)** திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக சண்டிலிப்பாய் புனித திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு விளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகள் - 076 632 5091**
**சகோதரி- 077 998 0361**
தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

மலர்வு
19
-
11
-
1943



உதிர்வு
12
-
12
-
2019

### முத்துராசா அந்தோனிப்பிள்ளை
(ஜெயரட்ணம்)

நாவாந்துறையை பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா அந்தோனிப்பிள்ளை (ஜெயரட்ணம்) நேற்று (12.12.2019) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துராசா ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சவேரியம்மாவின் பாசமிகு கணவனும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை அடைக்கலமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயா (சுவிஸ்), ஹென்றி (சுவிஸ்), கௌரி, டிபேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீபன் (சுவிஸ்), மெற்றில்டா (சுவிஸ்), நிக்சன் (மன்னார் பிரதேசசபை) ஆகியோரின் மாமனாரும் ஸ்ரெபி (சுவிஸ்), யஸ்மின் (சுவிஸ்), ஹெப்ரோன் (சுவிஸ்), ஹெரோன் (சுவிஸ்), றுக்சன், றெனிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **(14.12.2019)** சனிக்கிழமை மு.ப 11 மணி அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு நாவாந்துறை சென்நீக்கிலஸ் சனசமூகநிலையத்தில் வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மயிலு வீதி, ஆறுகால்மடம்**
**076 540 0946**
தகவல்:
**குடும்பத்தினர்**



# கிரீடத்தைவிட சுயமரியாதையை மேடையேற்றியிருக்கிறார் 'துன்ஸி'

இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாகத் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஸோஸிபினி துன்ஸி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 26 வயதான துன்ஸி தென்னாபிரிக்க நடிகை, மாடல். பிரபஞ்ச அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இரண்டாவது கறுப்பினப் பெண். இவர், தென்னாபிரிக்காவின் கிழக்கு கேப் பகுதியைச் சேர்ந்தவர். துன்ஸிக்குச் சூட்டப்பட்ட கிரீடம் ஒற்றுமையின் சக்தி (Power of Unity)' என்றுஅழைக்கப்படுகிறது. இது,18 கரட் தங்கம் மற்றும் ஆயிரத்து 770 வைரக் கற்களைக்கொண்டு தயார்செய்யப்பட்டது. இந்திய மதிப்பில் சுமார் 85 லட்ச ரூபாய் மதிப்பு பெறும் அந்தக் கிரீடம் தன் தலையில் சூட்டப்பட்ட பிறகு துன்ஸி பேசியது இதுதான்.

“என்னைப் போன்ற நிறமுடைய, தலைமுடி உடைய பெண்கள் அழகற்றவர்களாகக் கருதப்படும் உலகத்தில்தான் நான் வளர்ந்தேன். ஆனால், அப்படியான எண்ணங்களுக்கு இன்றோடு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. இனி, என்னைப் பார்க்கும் குழந்தைகள் என்னில் அவர்களின் பிரதிபலிப்பைக் காண்பார்கள்" என்றார்.

துன்ஸி கூறியது வெறும் மேடைப் பேச்சு மட்டுமல்ல, 400 ஆண்டுகள் வரலாற்றுப் பின்னணியுள்ள சொற்கள் அவை. பிரபஞ்ச அழகிப் போட்டிக்காகத் துன்ஸி பயணப்பட்டு வந்த அதே பாதையில்தான் 400 ஆண்டுகளுக்கு முன்பு பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் என அவரின் மூதாதையர்கள் கப்பல் வழியாக ஆங்கிலேயப் படைகளின் அமெரிக்கக் காலனிகளுக்கு கொத்தடிமைகளாக அழைத்து வரப்பட்டார்கள். கப்பலில் அழைத்துச் செல்லப்பட்ட 12.5 மில்லியன் ஆபிரிக்கர்களில் 10.7 மில்லியன் மக்கள் மட்டுமே பிழைத்தார்கள். அந்தப் பயணப்பாதைக்கு அட்லாண்டிக் அடிமைகள் பரிவர்த்தனை வழி (atlantic slave trade route) என்றே பெயர். ஆபிரிக்க ஐரோப்பிய ஆசிய நாடுகளின் (Afroeurasia) வணிகர்கள் அமெரிக்க வணிகர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த அடிமைகள் பரிவர்த்தனை பலநூறு ஆண்டு காலம் நிகழ்ந்தது.

**கறுப்பினப் பெண்களின் தலைமுடி**


ஆபிரிக்க கறுப்பினப் பெண்களின் தலைமுடி மற்ற பெண்களின் தலைமுடியைவிட வித்தியாசமானது. ஆபிரிக்க இழை வடிவிலான தலைமுடி (Afro textured hair) என்றே அதற்குப் பெயர். சுருட்டையான அடர்த்தியான தங்களது தலைமுடியை ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமாகப் பின்னலிட்டு அலங்காரம் செய்துகொள்வது ஆபிரிக்காவில் பாரம்பரியமாகவும் அவர்களுடைய அடையாளமாகவும் இன்றளவும் கருதப்படுகிறது. சூரிய ஒளியிலிருந்து அவர்களது சருமத்தைக் காக்க அவர்களுடைய தலைமுடியின் அடர்த்தி உதவுகிறது. அதைப் பராமரிப்பதை ஒரு கலையாகவே செய்வார்கள்.

**துன்ஸியின் ஹேர் ஸ்டைலுக்குப் பின் உள்ள சரித்திரம்!**

அதே பெண்கள் அமெரிக்கக் காலனிகளுக்கு அடிமைகளாக அழைத்து வரப்பட்டபோது அவர்களது தலைமுடிகள் மழிக்கப்பட்டன. கடல் கடந்து வந்த பிறகு, பராமரிக்க முடியாமல்போன அவர்களது தலைமுடி நோய்த் தொற்று உருவாக்கும் என நம்பப்பட்டது. வல்லரசு அமெரிக்க வீதிகளில் மொட்டையடித்த கறுப்பினப் பெண்கள் உலாவத் தொடங்கினார்கள். தலைமுடி மழிக்கப்பட்ட பெண்கள் தங்கச் சுரங்கங்களிலும் வைரச் சுரங்கங்களிலும் அடிமைகளாக உழைக்கப் பணியமர்த்தப்பட்டார்கள்.

கறுப்பின மக்களின் தாய்வழிச் சமூகத்தைப் பற்றி அறிய, தான் பயணப்பட்டதை 'Lose your mother' என்கிற புத்தகமாக எழுதிய சதியா ஹார்ட்மென், அடிமைகளாக அழைத்து வரப்பட்டமனிதர்களில் ஆபிரிக்காவிலேயே எஞ்சியிருந்த மக்களைப் பற்றியும் தங்களது தாய்வழிச் சமூகம் அங்குதான் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருப்பார்.

அப்படி எஞ்சியிருந்துவிட்ட தாய்வழிச் சமூகத்தின் நீட்சிதான் இன்று பிரபஞ்ச அழகியாகியிருக்கிறார். மழிக்கப்படாத தனது சுருள் தலைமுடியின் மீது தனது மூதாதையர்கள் சுரங்கங்களிலிருந்து எடுத்த வைரங்களைக் கிரீடமாகச் சூட்டியிருக்கிறார். அந்த வகையில் 85 லட்ச ரூபாய் கிரீடத்தைவிட தம் பெண்களின் சுயமரியாதையை மேடையேற்றியிருக்கும் அவரது சிகை அலங்காரம் விலை உயர்ந்ததாகிறது.



# வெற்றிமாறன் இயக்கத்தில் விஜய்?





தமிழில் முன்னணி நடிகராக வலம் வரும் விஜய் நடிப்பில் அண்மையில் வெளியான 'பிகில்' படம் வசூலில் பல்வேறு சாதனைகளைப் படைத்தது. இதையடுத்து லோகேஷ் கனகராஜ் இயக்கும் 'தளபதி 64' படத்தில் விஜய் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை தொடர்ந்து விஜய்யின் 65ஆவது படத்தை இயக்கப்போவது யார் என்ற கேள்வி சமூக வலைதளங்களில் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. அந்த வகையில் தடம் பட இயக்குநர் மகிழ்திருமேனி இயக்கத்தில் விஜய் நடிக்க உள்ளார் என்று செய்திகள் பரவின. ஆனால் இதற்கு அவர் மறுப்பு தெரிவித்து வதந்திக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இந்த நிலையில், இயக்குநர் வெற்றிமாறன் இயக்கத்தில் விஜய் நடிக்க உள்ளார் என்று சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

ஆரம்பகட்டப் பேச்சு சுமுகமாக நடைபெற்று வருவதாகவும், விரைவில் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# twitter

கோழியின் கிறுக்கல்!!
@Kozhiyaar

யாரைப் பற்றியும் கவலைப்படாத, எதைப் பற்றியும் கவலைப்படாத ஓர் ஆபத்தான தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது!!

முகிலன் ™@MJ_twets

எதிர்காலத்தை மாற்ற விரும்பினால் கசப்பான கடந்த காலத்தை மறக்க வேண்டும்

முகிலன் ™@MJ_twets

ஆணவத்தின் வழிகாட்டுதலில் தொடர்ச்சியாய் தோல்விகள் தோரணம் கட்டிக்கொண்டே இருக்கும் நாம் உணராத வரை ....

சிதறல்கள் @
mujib989898

யதார்த்தத்தை மீறுபவர்களின் வெற்றி சந்தேகத்திற்குள்ளேயே புலம்ப வைத்து விடுகிறது

வெற்றி வந்தால் பணிவு அவசியம்

தோல்வி வந்தால் பொறுமை அவசியம்

எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்

எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்






## மரண அறிவித்தல்

### சிவகுரு பரந்தாமன்



கொட்டடியை பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்தவருமான சிவகுரு பரந்தாமன் நேற்று 12.12.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு நாகவல்லி தம்பதிகளின் புதல்வனும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை முத்துலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இந்திராணியின் கணவரும் சிவகரன் (அப்பு - வவுனியா), இரவீந்திரன் (பிரான்ஸ்), மனோகரன் (யாழ் மாநகரசபை), காலஞ்சென்றவர்களான பபீந்திரன், கௌரி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் மஞ்சுளாதேவி (ஆசிரியை, வவுனியா), உஷாநந் தினி (பிரான்ஸ்), மாலினி (கோண்டாவில்), தயாநிதி (உடையார்கட்டு) ஆகி யோரின் பாசமிகு மாமனாரும் குணரட்ணம் சோதிமணியின் மைத் துனரும், யமுனா, புவனேந்திரன், பகீரதன், உஷாநந்தினி ஆகியோரின் சிறியதந்தையாரும் வரோகினி, அபிராம், மயூரன், மதுஷன், மதுரன், கபிலன், கஜிபன், கரிசன், தனுஜா, சரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கோண்டாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டையாலடி இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

தகவல் :
சிவாகரன், மனோகரன் (மகன்மார்)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பிரிவில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றும்
திரு.செ.ஸ்ரீரங்கன் அவர்களின் பாசமிகு தந்தையார்
**சின்னத்தம்பி செல்லையா**
அவர்கள் 11.12.2019 புதன்கிழமை
இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் உதவிப்பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
திரு.சு.பகீரதன் (பொருளாளர், மாவட்டச்செயலக நலன்புரிக்கழகம்)
அவர்களின் பாசமிகு தாயார்
**சுந்தரலிங்கம் சிவமணி,**
அவர்கள் நேற்றையதினம் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**


## வாடகைக்கு வீடு தேவை

சிறிய படித்த குடும்பம் ஒன்றிற்கு
வாடகைக்கு வீடு தேவை.
**தொடர்பு:- 077 011 2248**

## வாகனம் விற்பனைக்கு

10 1/2 அடி நீளமுள்ள (அலுமினியம் Body) ISUZU மற்றும் TOYOTA லொறிகள் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 246 2333**

## கணினி திருத்தம்

ALM COMPUTER SYSTEMS
உங்கள் வீடுகளிற்கே வந்து கணினிகள் திருத்தி தருகின்றோம்!
லப்டொப் கணினிகள்
திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
பருத்தித்துறை வீதி, கோப்பாய் யாழ்ப்பாணம்
அழையுங்கள் - 077 243 8537


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 31.12.1934 — மறைவு 13.11.2019

கடந்த 13.11.2019 புதன்கிழமை
அன்று இறைபதமடைந்த எமது
குடும்பத்தலைவி
**அமரர்**
**இராமநாதன் புவனேஸ்வரி**
அன்னார் நேயுற்று இருந்தபோது
அன்னாரை சிறப்பாக பராமரித்த
CERTIS LANKA நிறுவனத்திற்கும்
மற்றும் கண்ணீர் அஞ்சலி பதாகை
கள் மலர் வளையங்கள், தொலைபேசி
மூலமாக அனுதாபம்
தெரிவித்தோருக்கும்

அன்னாரின் மரண செய்தி அறிந்து சகல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (14.12.2019) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் T.C.T (தியாகி அறக்கொடைநிலையம் இல.527, நாவலர் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம்) மண்டபத்தில் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

இல.30, சங்கிலியன் வீதி, நல்லூர்

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1983



மறைவு 12 . 12 . 2019

### இராமதாஸ் சசிகரன் (தவில்)

மஞ்சத்தடி, இணுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமதாஸ் சசிகரன் நேற்று **(12.12.2019)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராமதாஸ்- சண்முகராணி தம்பதிகளின் பாசமிகு மகனும் சுமித்திரா வின் அன்புக் கணவரும், சுருளிசாமி- மகேஸ்வரி, சண்முகராசா- சரஸ்வதி ஆகியோ ரின் பேரனும் வஜீகரன் (பிரான்ஸ்), ராஜீ (ஆசிரியர் - யா/ தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உருத்திரா மகேஸ்வரி ஆகி யோரின் மருமகனும் பிரபா (பிரான்ஸ்), அனோஜன் ஆகியோரின் மைத்துனரும் கவிஷின் பாசமிகு மாமனும், ஸ்வாராவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(13.12.2019)** வெள்ளிக்கிழமை பிற்பகல் **3.00** மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C34131(16/17)


மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### செல்வரட்ணம் சுதாகரன்

**(முன்னாள் உத்தியோகஸ்தர், ஹட்டன் நஷனல் வங்கி (HNB) வவுனியா, பிரவீணா Travels, வித்தகி Transport ,அம்பாள் Tours உரிமையாளர்)**



தோற்றம் 06.11.1974 — மறைவு 11.12.2019

கொக்குவில், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கணுக்கேணி கிழக்கு முள்ளியவளையை வசிப்பிட மாகவும் கொண்ட செல்வரட்ணம் சுதாகரன் கடந்த (11.12.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற வல்லிபுரம் செல்வரட்ணம் மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சங்கரப்பிள்ளை புனிதவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் குசந்தினி (ஆசிரியர் - இ.த.க பாடசாலை) அவர்களின் அன்புக்கணவரும் வித்தகி (மாணவி தரம் - 03, இ.த.க பாடசாலை) அவர் களின் 'அன்புத்தந்தையும் பி.சுதாஜினி (பிரான்ஸ்), திருபாகரன் (பிரான்ஸ்), கு.சுதர்ஜினி (பிரான்ஸ்), ம.சுபாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபானந்த் (முன்னாள் Asst.Manager Sales & Marketing Ceylinco ins.co (பிரான்ஸ்), தி.சுபாசினி (பிரான்ஸ்), குணபாலன் (லண்டன்), மகேந்திரன் (பிரான்ஸ்), ப.தயாளினி (Accountant - Canada), குமுதினி (கரைத்துறைபற்று முல்லைத்தீவு பிரதேச செய லகம்), ச.முகுந்தன், ச.ஜெயந்தன், த.யாழினி ஆகியோரின் மைத்துனரும் பத்மராஜா (கனடா), இராசேந்திரன் (ஆசிரியர் - முல்லைத்தீவு) தவயோகநாதன் (முள்ளியவளை) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர் களான மாணிக்கம் வல்லிபுரம் - நாகம்மா வல்லிபுரம் (கொக்குவில்), மற்றும் காலஞ்சென்ற உடையார் செல்லத்துரை - மீனாம்பாள் (திருநெல்வேலி) தம்பதிகளின்பேரனும் M.V தியாகராஜா (Deputy Chairman Brown& Company, Former HNB Board of Dirctor) M.V ஜெகநாதன் (Former Production Operator at Chryster - Canada) M.V சண்முகநாதன் (Engineer - Canada), M.V ரவீந்திரன் (Former Shipping Company - Canada) M.V புவனேந்திரன் (Canada), பி.நாகேஸ்வரி (தமிழ் மொழி நெறியாளர், ஆசிரிய கலாசாலை) , செ.கனகேஸ்வரி (Rtd Br.Manager - RVG), ஜெ. அகிலேஸ்வரி, சி.விக்கினேஸ்வரி (England) ஆகியோரின் அன்பு பெறாமகனும் க.தங்கரத்தினம் (கொழும்பு), பா.இரத்தினபூபதி (Canada) தெ.ஜெகதாம்பிகை (Rtd.Accountant - Batticaloa), க.றுசீலா (MBA - Canada), செ.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கணுக்கேணி கிழக்கு முள்ளியவளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாவடிப்பிலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0094 77 310 7601**

தகவல் : செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (தாய் மாமன்)
( உரிமையாளர் - கவிலா ரேட் சென்ரர்)

# வெளிநாட்டு சிகெரெட்டுடன் ஒருவர் வவுனியாவில் கைது!

வவுனியா, டிச. 12

வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு சிகெரெட்டினை தனது உடமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

நேற்றுகாலை வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற நபர் ஒருவரை சோதனையிட்ட பொலிசார் அவரிடமிருந்து சட்டவிரோதமான வகையில் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்கள் இருந்தமையை கண்டுபிடித்தனர். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். மல்லாவியைச் சேர்ந்தவரே அவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். (ம-110)


## கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 09 . 05 . 1942



ஆண்டவன் அடியில் 11 . 12 . 2019

### தம்பு கனகசபை

வாழ்வென்னும் தேன்கூட்டில்
வசந்தமுடன் வாழ்ந்து
பாசமுடன் நீர் கள்ளம் கபடமில்லா
தெளிந்த பண்புடன் பழகி
நேசத்துடன் பழகி நேசமாய் இணைந்தும்
தேசத்திலே தேகம் விட்டுச் சென்றதேனோ?
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்ததை
நினைக்க முடியவில்லை
நீங்கள் பிரிந்த செய்திகேட்டு
நாம் பகிர்கின்றோம் கண்ணீரை...

எமது பாடசாலையின் ஆரம்பக்கல்வி ஆசிரியையான திருமதி சத்தியேஸ்வரி ஞானசேகரன் அவர்களின் அன்புத் தந்தை தம்பு கனகசபை அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம், சித்தன்கேணி.**

## மரண அறிவித்தல்



மலர்வு 31.12.1938 — உதிர்வு 11.12.2019

### திருமதி பராசக்தி கங்காதரன்

யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கிருலப்பனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.பராசக்தி கங்காதரன் அவர்கள் 11.12.2019 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் புதல்வியும் திரு.திருமதி. சோமசுந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகளும் திரு.கங்காதரன் **(Retired Surveyor Draughtsman)** அவர்களின் அன்பு மனைவியும் கங்கேஸ்வரி (ஆசிரியர் - சைவ மங்கையர் வித்தியாலயம்). சிவசக்தி (ஆசிரியர் - முஸ்லிம் மகளிர் கல்லூரி. கொழும்பு 4). காங்கேயன் (பூபாலசிங்கம் புத்தகசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவிச்சந்திரா **(Accountant-Telesonic Lanka Pvt.Ltd.)** உமாசுதன் **(Lab Assistant - Built Element Ltd.)** ஆகியோரின் அன்பு மாமியாரும்.கௌஷிகன் **(Software Engineer - Bileeta Pvt. Ltd.)** கஜானன் (கொழும்பு இந்துக்கல்லூரி). ஆகியோரின் பாசமிகு பேத்தியும். சிவபாக்கியம். காலஞ்சென்ற நடராசா. காலஞ்சென்ற தையல் நாயகி. ராஜேந்திரன் **(Retired Surveyor)** ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஸ்வநாதர், இந்திராதேவி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (முன்னாள் பா.உ) சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்
குடும்பத்தினர்

**இல 65, எட்மண்டன் வீதி,**
**கிருலப்பனை.**

யாழ் பல்கலைக்கழகத்தில்

## சூரியகிரகண அவதானிப்பு முகாமும், பயிற்சிப்பட்டறையும்
**26.12.2019 (வியாழக்கிழமை)**

வடஇலங்கை, சூரியகிரகணத்தை அவதானிக்கும் அரிய வாய்ப்பினை 26 டிசம்பர் 2019 அன்று பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கிளிநொச்சி பொறியியல் தொழில்நுட்ப பீடங்களிலும் சூரியகிரகண அவதானிப்பு முகாம்களை அமைக்கத்திட்டமிட்டுள்ளது.



ஆரம்பம்: 08:09 — கங்கண சூரியகிரகண நேரம் 09:35 - 09:38 — முடிவு: 11:21

பயிற்ச்சிப்பட்டறைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை

(13.12.2019, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி)
பரீட்சை நடைபெறும் நிலையங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | காரைநகர் யாழ்ரன் கல்லூரி |
| வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி | தெல்லிப்பளை யூனியன் கல்லூரி |
| நெல்லியடி மத்திய கல்லூரி | சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| வேலணை மத்திய கல்லூரி | புதுக்குடியிருப்பு (முல்லைத்தீவு) பிரதேச செயலகம் |
| கிளிநொச்சி மகா வித்தியாலயம் | முசலி (மன்னார்) பிரதேச செயலகம் |

- இத்தேர்வுக்கு முன்னர், சூரியகிரகணத்தைப் பற்றியும் அதனைப் பாதுகாப்பான முறையில் அவதானிப்பது பற்றியும் விளக்கவுரையுடன் கூடிய காணொளி பரீட்சை மண்டபங்களில் காண்பிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.
- பதிவினை மேற்கொள்ளாத மாணவர்கள் தமக்கு அண்மித்த பரீட்சை நிலையங்களுக்கு காலை ९ மணி தொடக்கம் ९३ ० மணிக்கிடையில் உடனடியாகப் பதிவு செய்தும் பரீட்சைக்குத் தோற்றலாம் என ஒழுங்கமைப்புக்குழு அறியத்தருகின்றது.

பதிவாளர்
12.12.2019

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி யோகாம்பிகை
**ஸ்ரீபாலமுருகதாஸ் (யோகம்)**



தோற்றம் 22. 09. 1948 — மறைவு 16.11.2016

என்னை வாழவைத்த தெய்வமே!
ஆண்டு மூன்று ஆனபோதும்
ஆழ்மனத்துயரம் ஆறவில்லை.
உங்கள் அன்புமுகம் மறைந்தாலும்
என் மனதில் உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
எம்மை எல்லாம் நன்குவாழ வழிகாட்டிய
என் அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

என்றும் உங்கள் நினைவுடன்
**அன்புக் கணவன் மற்றும் குடும்பத்தினர்.**

(m 061) (13)

## அரச கணக்காளர் சேவை 111 போட்டிப்பரீட்சை – 2019 & 2020

தமிழ் பேசும் மாணவர்கள் அரச கணக்காளர் சேவையில் உங்களை இணைத்துக்கொள்ள பல மாணவர்களின் வேண்டுக்கோளுக்கு இணங்க அரச கணக்காளர்களை முழுமையாகக் கொண்ட விரிவுரையாளர்களால் நடத்தப்படும்.

துரித மீட்டல் உடன் கூடிய கடந்தகால, மாதிரி வினாத்தாளுக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் 14.12.2019

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
**No.1, 2nd Lane Pouer House Road Jaffna,**
**Tel : 077 707 1601, 077 763 3915, 021 222 7770**

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி நேசமணி (நேசமக்கா)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நேசமணி (நேசமக்கா) நேற்று **(12.12.2019)** வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, ஜெயலோகா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவராசா, மகேஸ்வரி மற்றும் நடராசா, சின்னராசா, இராசமணி ஆகியோரின் சகோதரியும், நிகேதன், நிசாந்தினி, நிசாந்தன், நிரோஜன், நிருஷன், நிதர்ஷன், நிரோஷிகா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(13.12.2019)** வெள்ளிக்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS29897(16/17)

V.C ஒழுங்கை
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 01 . 1938



ஆண்டவன் மடியில் 12 . 12 . 2019

### திருமதி. பத்மாவதி சண்முகவேல்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பத்மாவதி சண்முகவேல் அவர்கள் 12.12.2019 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ரத்தினம் பாப்பம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சண்முகவேல் (பத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் மருதமுத்து. மரகதாம்பிகை. சக்திவேல் ஆகியோரின் சகோதரியும். சிவகுமாரன் (மணி). புஸ்பராஜா. கிருஸ்ணவேணி, பாலசுப்ரமணியம். மனோன்மணி. கேமலதா. சந்திரகலா. விக்னேஸ்வரன் (விக்கி)-Global IT Solution), ஆனந்தராஜா. கலைவாணி (வாணி) ஆகியோரின் அன்பு தாயாரும்.சுப்பிரமணியம். ஆனந்தன். அருந்ததி. சுபத்திரா. சுதர்சன். கிருஸ்ணதாஸ். சுஜித்தா. கிரிகரன் ஆகியோரின் மாமியாரும். ஜனனி, அஜந்தன், ஆரணி. சுஜித்திரன். கௌதமன். காயத்திரி. மதுரா. இந்திரா. அபிஸனா. யதிஸன். யதுஸன். யனுஸன். நிர்த்திகன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக 13.12.2019 வெள்ளி மற்றும் சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 8.00 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை 15.12.2019 காலை 11.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

விக்னேஸ்வரன் (விக்கி-மகன்) - 0779204176,077918391
அஜந்தன் (பேரன்) - 0769199144
வாணி (மகள்) - 0763528537
**E-mail : svignes@gmail.com**

**72-5/1 Victoria Court Hampdan Lane,**
**Wellawatte, Colombo 6**

தகவல்
குடும்பத்தினர்

## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

யாழ் போதனா வைத்தியசாலையில் 2019 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை செய்தல்

தலைவர், ஏல விற்பனை சபை 2019 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிட மிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் மார்கழி மாதம் 16,17,18 ஆகிய மூன்று தினங்களும் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ் மாவட்ட விவசாயநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிடமுடியும்.
3. பொருட்களை பெற விரும்புபவர்கள் வைத்தியசாலை காசாளரிடம் ரூபா 1000.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 30000.00 இனை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ் போதனா வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 19.12.2019 திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் காலை 10.15 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள்யாவும் பரிசீலிக்கப்படும். அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்விமனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏல்விற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்
8. மேலதிகவிபரங்களை வைத்தியசாலை கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 0212223149 இனை அழைத்து பெற்றுக்கொள்ளமுடியும்.

**பணிப்பாளர் (தலைவர்),**
**ஏலவிற்பனை சபை,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**
**13.12.2019.**

CH949(16/17)

11th EDITION

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
**Jaffna International Trade Fair**
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

**JITF 2020**

jitf.lk
www.jitf.lk

**24 25 26 ஜனவரி January**

**10.00 am - 8.00 pm**

**Muttraweli Ground** (Next to Jaffna Fort)
**முற்றவெளி திடலில** (யாழ்ப்பாண கோட்டை அருகாமையில்)

PLATINUM SPONSOR: INSEE CEMENT

OFFICIAL PARTNERS: TELECOMMUNICATION – Sri Lanka Telecom Mobitel; FOOTWEAR – DSI Sri Lanka's No. 1 Footwear; FOOD – Rumunu; COSMETICS – British Cosmetics; POWER TOOLS – DIMO

ORGANIZED BY: LECS Lanka Exhibition & Conference Services (Pvt) Limited

IN ASSOCIATION WITH: CCIY

ENDORSED & SUPPORTED BY: Ministry of Industry and Commerce; Consulate General of India Jaffna

PARTNER COUNTRY: India

More information: Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com

# NEW SCIENCE HALL

KANNATHIDDY **2022 A/L** JAFFNA

# கணித உயிரியல் பிரிவு

## தமிழ் மொழி மூலம்

### PHYSICS
திரு.S.சோதிலிங்கம் திரு.N.கபிலன்
திரு.G.பிரபா திரு.K.செல்வன்

### CHEMISTRY
திரு.K.சிவத்திரன் திரு.N.மகேஸ்வரன்
திரு.G.BENO திரு.T.சுசாந்தன்

### BIOLOGY
திரு.V.S குணசீலன்
திரு.T.கெங்காதரன் திரு.K.இராகவன்

### COM.MATHS
திரு.P. செந்தில்நாதன் - திரு.S.சிவகரன்

## ENGLISH MEDIUM

### PHYSICS
MR.S.SOTHILINGAM
MR.M.KUGANESWARAN

### CHEMISTRY
MR.G.BENO
MR.N.MAHESWARAN

### BIOLOGY
MR.V.S.GUNASEELAN
MR.S.P.NAGANATHAN

### COM.MATHS
MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

• அனுமதிகள் வழங்கப்படுகின்றது • ஆரம்பதிகதி பின்னர் அறிவிக்கப்படும்

https://facebook.com/newsciencehalljaffna 077 791 7611

# மயிலும் குரங்கும்!

தாதன்குளம் கிராமத்தை ஒட்டி, அடர்ந்த காடு இருந்தது. அதில் வசித்த மயில், இயற்கைப் பொருள்களால் அழகிய வீட்டைக் கட்டியது. அதன் அருகே, தரமான நாவல் மரம் ஒன்றை வளர்த்தது. அந்த மரம் கனிகளைப் பொழிந்தது.

இரக்கமும், அன்பும் நிறைந்த மயில், அந்தப் பழங்களைப் புசித்ததுடன், கேட்ட உயிரினங்களுக்கு எல்லாம், மனம் உவந்து வாரி வழங்கியது. பழங்களை வயிறார உண்ட உயிரினங்கள், பணிந்து வணங்கி வாழ்த்தின. பெரும் புகழுடன் விளங்கியது மயில்.

நகரப்பகுதியில் வசித்த குரங்கு ஒன்று, வழி தவறி அந்த காட்டுக்குள் வந்தது. நாவல் மரத்தில் பழங்கள் நிரம்பியிருக்கின்றமையைக் கண்டு குதூகலித்தது. மயிலுக்கு புகழ் பெருகியிருப்பதைக் கண்டதும், அதன் மனதில், வஞ்சக எண்ணம் முளைவிட்டது.

மயிலை ஒழித்துக்கட்டி, நாவல் மரத்தை அபகரிக்க முடிவெடுத்தது. அதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டியது. நேரடியாக சண்டையிடாமல், மயிலுக்கு புகழ்மாலை சூட்டி வலையில் வீழ்த்தும் திட்டம் தான் அது.

செயற்கை வண்ணங்களை எடுத்து வந்து மயிலைச் சந்தித்த குரங்கு, "உன்னை விட அழகான பறவையை, இந்தக் காட்டில் நான் பார்த்ததே இல்லை. அதனால் தான், எல்லா உயிரினங்களும் உன்னை வணங்குகின்றன. உன்னை இன்னும் அழகு படுத்தினால் உலக அளவில் புகழ் பெறுவாய். உலக அழகிப் போட்டியில் பங்கேற்கலாம்'' என, இனிக்க இனிக்கப் பேசியது.



புகழ்ச்சியில் மயங்கியது மயில். குரங்கு சொன்னவற்றை எல்லாம் தலையாட்டி ஒப்புக்கொண்டது. எடுத்து வந்திருந்த வண்ணங்களை, மயில் தோகை மீது பூசியது குரங்கு. அதன் இயற்கை அழகு மங்கியது.

இதை அறியாது, கபடமான வார்த்தைகளை நம்பிய மயில், "எல்லா விவரமும் தெரிந்து இருக்கிறாய் உன்னைப் போல் அறிவுள்ள குரங்கை காண்பது அரிது. நீ என்னுடன் தங்கினால் மகிழ்ச்சி அடைவேன்" என்றது.

தீட்டி வந்த திட்டம் சுலபமாக நிறைவேறியதால், குரங்கின் மண்டையில் கர்வம் ஏறியது. மயிலின் வீட்டில் குடியேறியதும், வஞ்சக எண்ணத்தை அரங்கேற்றத் தொடங்கியது.

முதல் உத்தரவாக, "மயிலை வணங்கும், எல்லா உயிரினங்களும் என்னையும் வணங்கிச் செல்லவேண்டும்" என, நிபந்தனை விதித்தது.

குரங்கின் சொல்லுக்கு, தலையாட்டும் பொம்மையாக மாறியது மயில்.

அடுத்த கட்டமாக, "இனிமேல், நாவல் பழங்களை இலவசமாக சாப்பிட அனுமதிக்க முடியாது. சிறிய தொகை கொடுத்தால் தான் பழங்கள் கிடைக்கும். அதுவும் குறிப்பிட்ட அளவுதான் பறிக்க வேண்டும்" என, உத்தரவிட்டது குரங்கு.

உயிரினங்கள் எல்லாம் கவலை அடைந்தன. குரங்கின் அட்டூழியம் அதிகரிப்பது பற்றி, மயிலிடம் புகார் கூறின. எதையும் காதில் வாங்காமல், புகழில் மயங்கித் திரிந்தது மயில். புகார் கூறிய உயிரினங்களையும் கடிந்து கொண்டது. உண்மையை அறியும் திறனை முற்றாக இழந்தது மயில்.

இதுதான் தக்க தருணம் என, சேட்டையை தீவிரமாக்கியது குரங்கு. காட்டை வளப்படுத்த உழைத்த உயிரினங்களை எல்லாம் அடித்து நொறுக்கியது.

தவறான ஆலோசனைகளைக் கூறி, மயிலுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தியது. அதன் புகழைக் கெடுத்தது. அழகில் மிளிரலாம் எனக் கூறி, மயிலுக்கு விஷத்தை ஊட்டியது. அதை, அமிர்தம் என்று குடித்த மயில், மயங்கிச் சாய்ந்தது. உடனே, அதன் இறக்கைகளை வெட்டி வீசியது. அழகிய தோகையை இழந்த மயில் துடிதுடித்து உயிரை விட்டது.

இதை அறிந்த காட்டு உரியினங்கள் அழுது புலம்பின. செய்வதறியாது திகைத்தன. அவை திரண்டு, காட்டின் பாதுகாப்பு மந்திரியான, கரடித் தலைவனிடம் முறையிட்டன.


குரங்கின் கொட்டத்தை அடக்க அதிரடியாக வியூகம் வகுத்தது கரடி.

மயிலின் வீட்டையும், நாவல் மரத்தையும் சுற்றி வளைத்தது கரடிக் கூட்டம். இதைக் கண்டதும், அஞ்சி நடுங்கி தப்பி ஓட முயன்றது குரங்கு. கம்பீரமாகச் சிரித்த கரடித் தலைவன், "குரங்கே... உன் ஆட்டம் எல்லாம் முடிந்தது.

நீ தப்பிக்கவே முடியாது மயிலைக் கொன்ற குற்றத்துக்கு தக்க தண்டனை கிடைக்கும் இனியும் உன் பொய் மூடை பிரசாரம் எல்லாம் எடுபடாது. தவறை உணர்ந்து சரணடைந்து விடு" என, எச்சரித்தது. வேறு வழியின்றி, சரண் அடைந்தது குரங்கு. அதற்கு, தக்க தண்டனை கிடைத்தது.









# காற்றாலை கிளப்பியுள்ள சர்ச்சை

ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குள், ஏ32 சாலையில் அறுகம்பவெளிக் கிராமத்திலிருந்து கோவிலாக்கண்டி கிராமத்தின் எல்லைவரை காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மின்சார சபைக்கு 61 சதவீத பங்கும், 39 சதவீத பங்கு தனியார்ருக்கும் சொந்தமான ஓர் நிறுவனத்தால் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 4 கிலோ மீற்றர் இடைவெளிக்குள் 8 காற்றாடிகள் இங்கு அமைக்கப்படவுள்ளன. நாளாந்தம் 20 மெகா வாட் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.



யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு 50 மெகா வோட்டும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு17 மெகா வோட் மின்சாரமும் நாள் ஒன்றுக்கு தற்போது தேவையாகவுள்ளது. இதேவேளை பளையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஊடாக 24 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

அறுகம்பவெளிக் கிராமத்தில் ஆரம்பிக்கப்படும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்துக்காக தென்பகுதியில் உள்ள திணைக்களங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மற்றும் உள்ளூர் அமைப்புக்களின் சம்மதம் இதுவரை பெறப்படவில்லை என்று கூறப்படுகின்றது. திட்டம் ஆரம்பிக்கப்படும் ஒரு பகுதி வெட்டைவெளியாக உள்ளபோதும் மறு புறம் குடிமனையை அது ஊடறுக்கின்றது.

8 காற்றாடிகளும், ஒவ்வொன்றும் 400 மீற்றர் இடைவெளியில் அமைக்கப்படவுள்ளன. இவைகடலை அண்மித்த பகுதிகளில் அமைக்கப்படுவதும், குடிமனைக்குள் அமைக்கப்படுவதும் பிரதேச மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது.

மறவன்புலவு பிரதேச மக்கள் இது தொடர்பில் பல தடவைகள் போராட்டம் நடத்தியுள்ளனர். காற்றாலைகள் அமைக்கப்பட்டால், அதன் உயரம் காரணமாக முகில் கூட்டங்கள் கலைந்து விடும். இதனால் தமக்கு மழை வீழ்ச்சி குறைந்து விடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்று பொறியியலாளர்கள் கூறுகின்றனர். வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் விவசாய அமைச்சராகப் பதவி வகித்த ஐங்கரநேசன், பளையில் இவ்வாறான காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்க இணங்கியிருந்தார். இது தொடர்பில் பலத்த சர்ச்சைகள் இருந்தாலும், இயற்கை சுற்றுச் சூழலியலுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துவரும் ஐங்கரநேசன். இயற்கை வழி மின்சார உற்பத்தியான, காற்றாலைகள் அமைக்க இணக்கம் தெரிவித்தமை இங்கு கவனிக்கப்படவேண்டியதொன்று.

திட்டம் அமையப்பெறும் உள்ளூராட்சிச் சபையான சாவகச்சேரி பிரதேச சபை அனுமதியை வழங்கவில்லை என்றபோதும், இந்தத் திட்டத்தின் ஊடான இலாபத்தில் 20 சதவீதம் சாவகச்சேரி பிரதேச சபைக்கு என்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திட்டம் ஒன்றின் இலாபத்தில் 15 சதவீதம் அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றத்துக்கு என்றபோதும், சாவகச்சேரி பிரதேச சபைக்கு 20 சதவீதம் வழங்க இணக்கம் காணப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திட்டம் முன்னெடுக்கப்படும் பகுதிகளில், 'அங்கீகரிக்கப்படாத நுழைவு தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துமீறுபவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்' என்று அறிவித்தல் பலகைகள் மின்சார சபையின் இலட்சினையுடன் காணப்படுகின்றன. இந்த அறிவிப்பும் மக்களின் எதிர்ப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

திட்டத்துக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போதே இவ்வாறு தடை அறிவித்தல் போடப்படுகின்றது. எதிர்காலத்தில் திட்டம் செயற்பட ஆரம்பித்ததும், இந்தப் பகுதியைத் தாண்டி எவ்வாறு கடற்றொழில் செய்வதற்குச் செல்வது? என்று மீனவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.


காற்றாலைகள் அமைப்பதற்கான அனுமதிகள் தொடர்பில் இழுபறி நிலமை காணப்படுவது ஒருபுறம் இருக்க, காற்றாலை அமைப்பதற்கான உபகரணங்கள் தென்பகுதியிலிருந்து தற்போது எடுத்து வரப்பட்டுள்ளன.

காற்றாலையை நிறுவுவதற்காக 106 சில்லுகள் பொருத்தப்பட்ட கொள்கலன்கள் மூலம் 80 அடி நீளமான இராட்சதக் குழாய்கள் எடுத்து வரப்படுகின்றன. இவ்வாறு எடுத்து வரப்படும் குழாய்கள் அந்தப் பகுதியில் அமைக்கப்படும் மேடைகளில் 4 குழாய்கள் வீதம் ஒன்றாகப் பொருத்தப்படவுள்ளன. மேடைகளுக்காக 33 மீற்றர் நீளத்தில் நிலத்தில் கொங்கிறீட் இடப்பட்டு நிலத்தின் மேல் 10 அடிவரை உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் ஒவ்வொரு காற்றாடியும் 350 அடி உயரமாக அமையவுள்ளது. இதில் அமைக்கப்படும் விசிறிகள் 200 அடியைக் கொண்டதாக அமையும்.

இது இயக்கப்படும்போது மழைவீழ்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற மக்களின் கருத்துக்கு, விஞ்ஞான ரீதியானதாகவோ அல்லது சரியான வகையிலோ விளக்கங்கள் வழங்கப்படவேண்டும். இயற்கை வழியிலான மின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டியதொன்று. சுன்னாகம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட மின்உற்பத்தி நிலையத்தின் கழிவு ஒயிலால் குடாநாட்டின் வளமான வலிகாமம் மண் பாதிப்புக்குள்ளானது.

எனவே அதற்கு மாற்றீடாக இவ்வாறான இயற்கை வழி மின் உற்பத்தி ஊக்குவிக்கப்படவேண்டிய அதே வேளை, மக்களின் நியாயமான சந்தேகங்களும் தீர்க்கப்படவேண்டும். ■

திட்டம் முன்னெடுக்கப்படும் பகுதிகளில், அங்கீகரிக்கப்படாத நுழைவுத் தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துமீறுபவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று அறிவித்தல் பலகைகள் மின்சார சபையின் இலட்சினையுடன் காணப்படுகின்றன. திட்டத்துக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போதே இவ்வாறு தடை அறிவித்தல் போடப்படுகின்றது. எதிர்காலத்தில் திட்டம் செயற்பட ஆரம்பித்ததும், இந்தப் பகுதியைத் தாண்டி எவ்வாறு கடற்றொழில் செய்வதற்குச் செல்வது என்று மீனவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



# வடக்கில் வளச்சுரண்டலா மணல் நகர்த்தல் முடிவு?

மணல் கொண்டுசெல்வதற்கு அனுமதிபெறும் நடைமுறையை அமைச்சரவை நிறுத்தியதன் விளைவுகள் மிக மோசமானவையாக மாறிவிட்டன. வடக்கில் இருந்து தென்னிலங்கை நோக்கி தினந்தோறும் பலநூறு டிப்பர் மணல் நகர்த்தப்பட்டு வருகின்றது. வடக்கில் வளச் சுரண்டலை மேற்கொள்ளும் நோக்கில்தான் அமைச்சரவையின் முடிவு அமைந்துள்ளதா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

கடற்கரையோரங்களில் மலையாகக் குவிந்திருந்தபோது கடந்த காலங்களில் வரையறையின்றி மணல் எடுத்ததன் பாதிப்பை கரையோர மக்கள் நன்றாகவே உணர்ந்ததால் மிகக் கடுமையான எதிர்ப்பை தற்போது வெளிப்படுத்தி வருகின்றனர். கல்வியியலாளர்களும் மணல் அகழ்வதால் வரும் பாதிப்பை எச்சரிக்கத் தவறவில்லை. வளம் அருகிச் செல்வதற்கு அப்பால், கடல் நீர் கிராமங்களுக்குள் நுழைந்து நிலத்தையும், தண்ணீரையும் நாசமாக்க முற்பட்டதால் அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பு மிகத் தீவிரமாகிறது. இந்தச் சிக்கலைத் தீர்க்கும் அதேநேரம், மணல் கிடைப்பதை தடுக்க முடியாத தேவைப்பாடும் உள்ளது. போருக்குப் பின்னரான அபிவிருத்திகள், கட்டுமானங்கள் விரிவாக்கப்படும் வேளையில், மணல் கிடைப்பதைத் தடுப்பது வடக்கின் அபிவிருத்தியை முடமாக்கவே செய்யும். அதேநேரம் மணல் நகர்த்தலுக்கான அனுமதி ஒரு குறிப்பிட்ட பகுதியில் வளத்தைச் சுரண்டும் வகையிலும் அமையக்கூடாது.

அதனால்தான் கனிய வளங்களுள் ஒன்றான மணலைப் பெறுவதற்கு பொதுவான நடைமுறை ஒன்றை அரச அலுவலர்கள் வகுத்து அரசியல்வாதிகளின் அனுமதியுடன் செயற்படுத்தி வந்தனர். அது முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை என்பதற்கு அப்பால், இயன்றளவு கட்டுப்படுத்தப்பட்டது. மணல் வீணாக்கப்படுவது ஓரளவு தடுக்கப்பட்டது. அவ்வாறிருந்த ஒரேயொரு வாய்ப்பையும் தகர்த்துவிட்டுள்ளது, மணல் கொண்டுசெல்ல அனுமதி தேவையில்லை என்ற புதிய அமைச்சரவையின் அறிவிப்பு.

இதன் விளைவு மணல் ஏற்றும் இடங்களில் வசிக்கும் மக்களுக்கும் மணல் ஏற்றுபவர்களுக்கும் முறுகல் தீவிரமாகியுள்ளது. மணற்காட்டில், தீவகத்தில், கிளிநொச்சியில் மக்கள் கடும் சினத்துடன் உள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே, யாழ்ப்பாணம்தீவகத்தில்உழவியந்திரம்தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கனியவளத் திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களம் என்பனவற்றை வடக்கில் அமைக்க வேண்டும் என்று 2017 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மணல் அகழ்வு வரையறையின்றி இடம்பெறுவதைத் தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் அதன் நோக்கமாக இருந்தது. எனினும் அந்த முயற்சிகூட இரண்டு வருடங்களாக இழுபறியிலேயே உள்ளது.

இவை எல்லாம் அமைச்சரவை அனுமதியை எதிர்க்கும் வகையில் அமைகின்றது. காரணம், நடைமுறைக்குச் சாத்தியப்படாத ஒரு காரியத்தை அரசு செயற்படுத்துகின்றது என்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. கரையோர மக்களின் நலன்களைக் கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளாமல்தான் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டது என்று மக்கள் கருதுகின்றனர்.

எனவே கரையோர மக்களின் எதிர்ப்புக்களை, உணர்வுகளை அரச அலுவலர்களும், அரசும் புரிந்துகொண்டு செயற்பட வேண்டிய தவிர்க்கமுடியாதநிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மெல்ல ஆரம்பித்த இந்த நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் முன்னரைவிட அதிகரித்துள்ள நிலையில் விளைவுகள் மோசமாகிச் செல்லவும் வாய்ப்புள்ளது. இது அரசுக்குத் தெரியாததொன்றல்ல. எனவே இந்த விடயத்தில் அரசு மெத்தனத் தனமாக இருக்காது, உடனடியாகக் காத்திரமான நடவடிக்கைஎடுக்கவேண்டும். அபிவிருத்திகளைவிரைவுபடுத்தும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும்கூட, அதை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை அரசு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

# 'ரோபோ ஆக்கத்திறன்' போட்டிகளில் இரு மாணவருக்குப் பதக்கங்கள்




யாழ்ப்பாணம், டிசெ. 13

முதல்முறையாக பாடசாலை மாணவர்களுக்கிடையே ஐந்து வெவ்வேறு தலைப்புக்களில் நடத்தப்பட்ட 'ரோபோ ஆக்கத்திறன் போட்டி'யில் வடக்கு மாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்றுவெற்றிபெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தொழில்நுட்ப உலகத்தில் மாணவர்கள் வெற்றிகரமாக வாழ முடியும் என்ற நோக்கில் 'ரோபோ' ஆக்கத்திறன்போட்டிகள்நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளின் ஒவ்வொரு பிரிவிலும் வடக்குமாகாணபாடசாலை மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். சுமார் 15 க்கும் அதிகமான மாணவர்கள் தேசியமட்ட போட்டியில் கலந்து கொண்டனர். அவர்களில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ர. றஜிந்தன் பொறியியல்தொழில்நுட்பப் பிரிவில் 2ஆம் இடத்தையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் சி. விந்துயன் மகிழ்வூட்டல் பிரிவில்2ஆம்இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுக்கு வெள்ளிப் பதக்கம், சான்றிதழ், பணப் பரிசில் என்பன கல்விஅமைச்சில்கடந்த 10ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

மாணவர்களின்ஆக்கத்திறனை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தொழில்நுட்ப உலகத்தில் மாணவர்கள் வெற்றிகரமாக வாழமுடியும் என்ற நோக்கில் 'ரோபோ' ஆக்கத்திறன்போட்டிகள்நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளின் ஒவ்வொரு பிரிவிலும் வடக்கு மாகாணப் பாடசாலைமாணவர்கள்திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். (த-7)

## சிறுமிக்கு பாலியல் தொல்லை

# சித்தப்பாவுக்கும் பூசகருக்கும்மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 13

வல்வெட்டித்துறையில் ஒன்பது வயதுச் சிறுமி ஒருவரின் சித்தப்பா முறையான ஒருவரும், கோவில் ஒன்றின் பூசகரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்தனர் என்று குற்றஞ்சாட்டில் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமி சார்பாக சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷும், பூசகர் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும் ஆஜராகினார்கள். சிறுமியின் சித்தப்பா சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகவில்லை.

சிறுமி அலைபேசி வைத்திருப்பதை கடந்த 27ஆம் திகதி பாடசாலையில் ஆசிரியர் கண்டறிந்தார்.

அதுபற்றி விசாரித்தபோது வல்வெட்டித்துறை அர்ச்சகர் ஒருவர் தந்தார் என்றும் அலைபேசியில் வருமாறு அழைத்து பிரசாதம் தருபவர் என்றும் சிறுமி கூறியுள்ளார். சந்தேகம் கொண்ட ஆசிரியர் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவித்தார். ஆசிரியருக்குக் கூறிய விடயத்தையே சிறுமி பொலிஸாருக்கும் கூறியுள்ளார். சிறுமி பயன்படுத்திய அலைபேசி 'சிம்' பூசகரின் பெயரில் காணப்படுகின்றது.

விசாரணையின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்து பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த 30ஆம் திகதி முற்படுத்திய பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. பூசகரை பிணையில் விடுவிக்குமாறு அவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி மன்றில் கோரினார். சிறுமி சார்பில் முற்பட்ட சட்டத்தரணி பிணைக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான், விளக்கமறியலை நீடித்தார். சிறுமியின் சட்ட மருத்துவ அறிக்கை மற்றும் வாக்குமூலத்தை அடுத்த தவணை நீதிமன்றில் சமர்ப்பிக்கவும் மன்று உத்தரவிட்டது. (த)



# யாழ். மாவட்ட செயலகத்தில் பிரதீபன் கடமையேற்றார்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாண மாவட்ட உதவிச் செயலராக ம. பிரதீபன் நேற்றுக் கடமைகளைப்பொறுப்பேற்றார். இவர் இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலராகப் பணிபுரிந்தார். யாழ்ப்பாண மாவட்ட உதவிச் செயலராகப் பணியாற்றிய கே. கனகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட உதவிச்செயலராக இடமாற்றம்பெற்றுச்சென்றுள்ளார். (த-111)

# இறுதிப்பரீட்சை

முல்லைத்தீவு, டிசெ.13

முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையும், வேல்ட் விசனும் இணைந்து நடத்தும் தேசிய தொழில் தகைமைக்கான இறுதிப்பரீட்சை நாளை முள்ளியவளையில் அமைந்துள்ள அதிகாரசபைக்காரியாலயத்தில் நடைபெறும்.

தொடந்து 3 நாள்கள் நடைபெறும் பரீட்சை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)



செல்வராஜா ரமேஷ்

# துணிந்து முடிவு எடுக்கவேண்டும்!



நாடாளுமன்றத்தில்மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று 19 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாது ஒழித்து 1978 ஆம் ஆண்டு பெரும்பான்மை பலத்தின் கீழ் நடைமுறைப்படுத்திய நிறைவேற்று ஜனாதிபதி முறையை நடைமுறைப்படுத்துவதே தற்போதைய ஆட்சியாளர்களின் இலக்கு ஆகும்.

19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருந்தால் நிறைவேற்று அதிகாரம் நாடாளுமன்ற சமநிலையை விடக் கூடுதலான அதிகாரப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் எனக் கூறமுடியாது. ஒப்பீட்டளவில் ஜனாதிபதியின் அதிகாரத்தை விட பிரதமரே கூடுதல் அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடியதாக இருக்கும்.

19 ஆவது திருத்தம் கொண்டுவந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அதனை பிரயோகிக்க முடியாத நிலையில் அவரே கையறு நிலைக்குக் சென்றமையும் தெரிந்ததே.

19 என்ற இலக்கமானது ஏற்கனவே இருந்த நடைமுறைக்கு மாறாக ஒரு வருடத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டு நான்கரை வருடத்துக்குப் பின்னரே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கும் நிலைமை உருவாகியுள்ளது.


இன்றைய புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் திட்டத்துக்குத் தயாராகி அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றார். இதனைவிட 19ஆவது இலக்கம் (திருத்தச்சட்டம்) இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் எவரேனும் தேர்தலில் போட்டியிட முடியாது. ஒருவர் இரு தடவைக்கு மேல் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இதனைவிட முக்கியமானதாக ஜனாதிபதி தம் அதிகாரத்துக்குள் எவ்வித அமைச்சுக்களையும் பொறுப்பேற்க முடியாதென்பதுடன் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஐ விட அதிகரிக்கக் கூடாது எனவும் 19 ஆவது திருத்தச் சட்டம் எழுத்தில் வலியுறுத்தி நிற்கின்றது.

கடந்த 2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி நல்லாட்சி தத்துவத்தின் அடிப்படையில் 100 நாள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து அதன் ஓர் அங்கமாக முன்னெடுத்த திட்டம் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என்ற முறையான கொள்கை முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் 19 ஆவது திருத்தச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு நிறைவேற்றப்பட்ட திட்டமே பின்னர் திட்டத்தை நடைமுறைப்படுத்திய ஜனாதிபதிக்கே ஆப்பாக மாறியதும் அதன் ஊடக ஜனாதிபதி பிரதமர் சமநிலையற்று பொருளாதார மீட்சிக்குப் பதிலாகப் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டதும் சட்டத்தின் முன் யார் பெரியவர் யார் சிறியவர் என்ற விடயமும் இலங்கை அரசில் விவாதிக்கப் பட்டது.

இந்த நிலையிலேயேதான் இன்று கூடுதல் அதிகாரம்மிக்கவராகப் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ உள்ள அதே நிலையில் ஜனாதிபதி 19 க்கு உட்பட்டு இருப்பதனால் நடைமுறையில் வலுப்படுத்தல் முன்கொண்டு செல்லல் என்பது சட்டத்தின் பால் உள்ளதால் எதனையும் முன்கொண்டு செல்லமுடியாத நிலையுணரப்பட்டே விரைவில் மூன்றில் இரண்டு பங்கின் மூலம் மீள ஜனாதிபதி சகல வரப்பிரதாரங்களையம் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

**19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருந்தால் நிறைவேற்று அதிகாரம் நாடாளுமன்ற சமநிலையை விடக் கூடுதலான அதிகாரப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் எனக் கூற முடியாது. ஒப்பீட்டளவில் ஜனாதிபதியின் அதிகாரத்தைவிட பிரதமரே கூடுதல் அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடியதாக இருக்கும்.**



ஒரு நாட்டின் அதிகாரம் என்பது இரண்டு தோணியில் கால்வைத்து இருப்பதனைவிட ஒரு தோணிக்கு ஊடாக குவிந்த அதிகாரத்தைக் கொண்டிருப்பது இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று வாதிடுபவர்களையும் இன்று காண முடிகின்றது. இது இவ்வாறு இருக்க 19 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் இருக்கும் என்பதுடன் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களும் இவ்வாறானதாக இருக்கும் இதற்கு இந்த 19 காரணமாகும். இது நாட்டில் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு இருந்த வேளையும் கடந்த வருடம் இடம்பெற்ற ஒக்ரோபர் 26 புரட்சியும் இடம்பெற்று அரசியல் நெருக்கடி ஏற்பட்டதும் அதற்கு சுயாதீனமான நீதியான சட்ட ஆட்சி தீர்ப்பளித்ததன் பிரகாரம் மீளவும் நல்லாட்சி கொண்டுவரப்பட்டது அன்று முதல் இவ்வகையில் 19 இன் ஆட்சி வலுவிழந்து வலுப்பெற்றதும் எமது நாட்டில் இடம்பெற்ற அனுபவ முறையாகும்.

அந்த நிலையில் 19 வேண்டும் என்று ஒரு சாராரும் 19 வேண்டாம் என்ற இன்னொரு சாராரும் தேர்தலை மையப்படுத்தி முன்னெடுக்கவுள்ள நேரம் கனிந்து வருகின்றது.

எமது மக்களின் வாக்குகளும், 19 தொடர்பில் தீர்க்கமானதாக இருக்கப் போகின்றது. 19ஆவதுதிருத்தம்நீக்கப்படுவதற்கு, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் அவர்கள் சார்ந்தவர்களும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நெருங்கக் கூடாது. 19ஆவது திருத்தம் தொடரவேண்டும் என்று இப்போதும் அழுத்தமாகத் தெரிவித்து வரும் கூட்டமைப்பு, நிச்சயமாக வடகிழக்கில் அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக் கொள்வது, ராஜபக் ஷாக்கள் மூன்றிலிரண்டு பெறுவதை ஓரளவாவது தடுக்கும். ராஜபக் ஷாக்களின் பிரதிநிதிகளுக்குத் தமிழ் மக்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும் முறையான பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

## 13 பவுண் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், டிசெ. 13
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்டகோவிலாக்கண்டிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கொள்ளை இடம்பெற்றுள்ளது.

ஏ-32 பிரதான வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் 13 பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
அதிகாலை ஒரு மணியளவில் வீட்டின் புகைக்கூட்டைப் பிரித்து உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் உரிமையாளரான கணபதிப்பிள்ளை பத்மசீலனிடம் நகைகள், பணங்களை கேட்டுத் தாக்கியுள்ளனர். வீட்டின் உரிமையாளர் சத்தம் எழுப்பவோ அல்லது தப்பித்துச் செல்லவோ முடியாத நிலையில் ஐவர் அடங்கிய குழு கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட 13 பவுண் நகைகளில் 5 பவுண் நகைகள் அருகில் உள்ள ஆலயமொன்றுக்குச் சொந்தமானவை.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-105)

## 'திலகார்ப்பணம்'

யாழ்ப்பாணம், டிசெ.13
கலாபூஷணம் எஸ். திலகநாயகம் போலின் 10ஆவது ஆண்டுஞாபகார்த்தமாக 'திலகார்ப்பணம்' என்ற நிகழ்வு நல்லூர் சோமராகம் இசைமன்றத்தால் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த இசைக் கலைஞரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான கலாபூஷணம் திருமதி நேசபூபதி அனுவை நாகராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# தொடர் இடருக்குள் சிக்கும் நாவாந்துறை


### மக்களின் அவலத்துக்கு விரைவில் தீர்வு

யாழ்ப்பாணம் ,டிசெ.13
காலம் காலமாக ஏற்படும் வெள்ள இடரால் நாவாந்துறை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பருவ மழைக்கும் இடம்பெயரும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். இதற்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். மாநகர சபையின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. அதில் பிரதி முதல்வர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரித்ததாவது:
பொம்மைவெளியில் அமைக்கப்பட்டுள்ள 9 குறுக்கு வீதிகளின் வடிகான்களின் நீர் வடிந்தோடும் பகுதி நாவாந்துறை மக்களின் குடியிருப்புப் பகுதி நோக்கி அமைந்துள்ளதால் வெள்ளம் தேங்கும் நிலை காணப்படுகிறது. இதனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஒருவரே அமைத்தார். பொம்மை வெளிப்பகுதியிலிருந்து வடிந்தோடி வரும் வெள்ளம் நாவாந்துறை மக்களின் குடியிருப்பு நோக்கி வருகிறது. அதனால் நாவாந்துறை மக்கள் பல்வேறு இடர்களைச் சந்திக்கின்றனர். 9 வீதிகளின் வடிகான்களை மீண்டும் சீரமைத்து, அராலி வீதிவழியாகச் செல்லும் பெரிய வாய்க்காலுடன் இணைப்பதன் மூலம், இந்த இடர்பாடுகளைத் தவிர்க்க முடியும்- என்றார்.

இதனைச் செவிமடுத்த முதல்வர் அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார். (க-104)



## குண்டும் குழியுமாக வளர்மதி வீதி

கைதடி,டிசெ.13
கைதடி விக்கினேஸ்வரா வீதியையும், இந்தனை வீதியையும் இணைக்கும் வளர்மதி வீதி சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த வீதி பல வருடங்களாக முற்றாகத் திருத்தப்படவில்லை. "கிராமத்துக்கு ஒரு மில்லியன்"திட்டத்தில் வீதி சீரமைக்கப்பட்ட போதும், நிதி போதாமையால் சுமார் 150 மீற்றர் நீளமான வீதி சீரமைக்கப்படவில்லை. அந்தப் பகுதி குண்டும் குழியுமாக கடந்த நான்கு வருடங்களாகக் காணப்படுகின்றது.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக அங்கு வெள்ளம் தேங்கியுள்ளது. வீதியைச் சீரமைக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தும் பயனில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-288)

## அகராதி நூல்கள் வெளியிடப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 13
யாழ்ப்பாணம் கூடலூர் நடராசா சிறிரஞ்சனின் 'யாழ்ப்பாணத் தமிழ் அகராதி' மற்றும் 'யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதி பாகம்1' ஆகிய இரு அகராதி நூல்களின் வெளியீடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இது நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மொழியியல் துறைப் பேராசிரியர் சுபதினி ரமேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி சி .பத்மநாதன், சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் பெ.மாதையன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் தமிழிலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். (து-7)










## விபத்தில் இருவர் காயம்

கொடிகாமம்,டிசெ.13
இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்தனர். இந்த சம்பவம் ஏ9 வீதியில் மிருசுவில் சந்திக்கு அருகாமையில் நேற்றுமுந்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

கொடிகாமத்தில் இருந்து பளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், மிருசுவில் சேச் வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் இந்திராபுரம் பளையைச் சேர்ந்த 39 வயது ஆண் ஒருவரும்,36 வயது பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதன் பின்னர் மேலதிக் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-159)

## உதவி பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 13
வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம் உரும்பிராய் பிரதேச இளைஞர்கள் ஒன்றிணைந்து உதவிப் பொருள்களை வழங்கினர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கற்சிலைமடு, பேராறு மற்றும் முத்தையன் கட்டு கிராமங்களில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. உலருணவுப்பொதிகள், குழந்தைகளுக்கான பால்மா மற்றும் உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன.

இதன்போது ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் இடர்முகாமைத்துவ அலுவலர் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-104)

### பளை மருத்துவமனையில்

# சிகிச்சை பெறுவதில் குறைபாடுகளா?

### ஆராயப்படும் என்கிறார் பிராந்தியப் பணிப்பாளர்

கிளிநொச்சி, டிசெ. 13

பளை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கென செல்பவர்களை மருத்துவர்கள் உரிய கவனம் செலுத்தி சிகிச்சை வழங்குவதில்லை என்று பொதுமக்கள் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ9 வீதிக்கு அருகில் இந்த மருத்துவமனை உள்ளது. இதன் பொறுப்பதிகாரியாக இருந்த மருத்துவர் சி.சிவரூபன், சில மாதங்களுக்கு முன்னர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால், இதே மருத்துவமனையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார்.

தற்போது அங்கு ஒரு மருத்துவர் ஒப்பந்த அடிப்படையிலேயே பணிபுரிகின்றார்.

தற்போது சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் இரவில் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் கிளிநொச்சி அல்லது சாவகச்சேரி மருத்துவமனைகளுக்கு மாற்றப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நோயாளர்களைப் பார்வையிட்ட பின்னர் தனியார் மருந்தகங்களில் மாத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மருந்துகளின் பெயர்கள் எழுதிக் கொடுக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

எனினும், குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்த பின்னரே அது பற்றிக் கூறமுடியும் என்று கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். எனினும் இவை தொடர்பில் ஆராய்ந்து நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (த-6)



# தமிழ் விருட்சம் உதவிக்கரம்

வவுனியா,டிசெ.13

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் விருட்சம் அமைப்பினரால் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொதிகள், குழந்தைகளுக்கான பால்மா, நுளம்பு வலை, பாய் போன்றவைவ்ழங்கப்பட்டு வருகின்றன.

புலம்பெயர் தமிழர்களின் நிதியுதவியுடன் உதவிகள், கடந்த நான்கு நாள்களாக வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-ரி4)

### பிரதேச செயலரின்

# ஊழல் விசாரணைக்கு அரசியல் அழுத்தங்கள்

வவுனியா,டிசெ.13

வவுனியா பிரதேச செயலரின் ஊழல் விசாரணைக்கு, அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா பிரதேச செயலருக்கு எதிராக காணி மோசடிகள் மற்றும் ஊழல் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் ஊழலுக்கு எதிரான மக்கள் அமைப்புக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதனையடுத்து வவுனியா பிரதேச செயலரை, மாவட்டச் செயலகத்துக்கு இணைக்குமாறு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் மாவட்டச் செயலருக்குக் கடிதம் மூலம் கோரப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையிலும் மாவட்டச் செயலரால் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அந்தக் கடிதம் கிடைக்கப்பெற்று ஒரு வார காலத்துக்கு மேலாகியும் மாவட்டச் செயலர், பிரதேச செயலரை மாவட்ட செயலகத்துடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு காலதாமதப்படுத்துவது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயத்தில் அரசியல் அழுத்தங்கள் பிரயோகித்து, பொதுச் சேவை ஆணைக்குழுவின் முடிவை மாற்றுவதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று நம்பகரமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. - என்றுள்ளது. (க)



# “வெற்றித் திறவு கோல்” நூல் வெளியீட்டு நிகழ்வு

வவுனியா,டிசெ. 13

பொக்கிசம் அமைப்பின் ஆதரவில் எழுத்தாளரும் பேச்சாளருமான கு.குணசிங்கத்தின் “வெற்றித் திறவு கோல்” நூல் வெளியீட்டு நிகழ்வு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியா பாரதி வித்தியாலய அதிபர் எ.முரளிதரன் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்விருந்தினர்களாக தமிழருவி சிவகுமாரன்,மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன்,விரிவுரையாளர் இ.புஸ்பகாந்தன்,சட்டத்தரணி இ. தயாபரன், அமுதம் சேதன அமைப்பின் தலைவர் நேசராஜா,பொக்கிசம் அமைப்பைச் சேர்ந்த சி.நந்தினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிவஸ்ரீ சோமகிரிதர குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

நூலின் முதற்பிரதியை விரிவுரையாளர் புஸ்பகாந்தனிடம் இருந்து சர்வோதயா மாவட்ட இணைப்பாளர் உதயகுமார் பெற்றுக்கொண்டார். நூலிற்கான வெளியீட்டுரையை சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசனும்,நயப்புரையை தமிழருவி சிவகுமாரனும் நிகழ்த்தினர். (ஜ-110)

# ஒற்றுமைப்பட்டால்தான் புதிய பாதைகள் தெரியும்

### முஹம்மது நபியின் பிறந்ததின நிகழ்வில் கருத்து

மன்னார், டிசெ. 13

பொதுவான விடயங்களில் ஒற்றுமைப்பட்டு ஒன்றாக வாழ முயற்சிக்கின்றபோதுதான், வேற்றுமைகளைக் களைந்து சமய, சமூக, சக வாழ்வுக்கான பாதைகளைக் கண்டுகொள்ளக்கூடியதாக இருக்கும் என்று மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் முஹம்மது நபியின்(ஸல்) பிறந்ததின நிகழ்வு மன்னார் நானாட்டான் அளவக்கை கார்மேல் மாதா ஆலய கேட்போர் கூட்டத்தில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

சமய விழாக்களைக் கொண்டாடுவதன் நோக்கம், அவற்றின் முக்கியத்துவம், அதிலிருந்து ஏனைய சமயத்தவர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய விடயம், விழாக்களின் ஊடாக சமயங்கள் சொல்லும் செய்தி, என்பனவற்றை ஒவ்வொரு சமயத்தவரும் பின்பற்றவேண்டும் என்பதற்காகவே என்றும் அடிகளார் தெரிவித்தார்.

நிகழ்வில் அருட்தந்தையர்கள், மௌலவிகள், சர்வ மத குழுக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-56)



# இரணைமடுக் குளத்தின் சிக்கல்களை தீர்க்க குழு

## விவசாயத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

இரணைமடுக் குளத்தைச் சரியாக நிர்வகித்து, அதன் ஊடான பிரச்சினைகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு 24 மணித்தியாலமும் அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மழை காலத்தில் இரணைமடு குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து பின்னர் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்ட சம்பவங்கள் கடந்த காலத்தில் இடம் பெற்றிருந்தன. இந்தப் பிரச்சினைகள் இந்தத் தடவை ஏற்படக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மழைவீழ்ச்சி அதிகரிப்பால் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து, வான்கதவுகள் திறக்கப்பட்டன. தற்போது மழை வீழ்ச்சி குறைந்துள்ளதால் 14 வான் கதவுகளில் 6 வான் கதவுகள் மாத்திரம் திறக்கப்பட்டுள்ளன. மிகுதி பூட்டப்பட்டுள்ளன. மழை வீழ்ச்சி இன்னும் குறைந்தால் சகல வான்கதவுகளையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குளத்தைச் சரியாக நிர்வகித்து மணித்தியாலத்துக்கு ஒரு தடவை நீர் மட்ட வாசிப்பு பெறப்படுகிறது. தொழில்நுட்ப அலுவலர், பொறியியலாளர்கள் என மூன்று பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு 8 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை குழுக்கள் மாறிக்கொண்டிருக்கும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்தது. (த-7)



## மக்களின் குறைபாடுகள் அபிவிருத்திக் குழுவிடம்

முல்லைத்தீவு, டிசெ.13

கள்ளப்பாடுதெற்குக்கிராமமக்கள்தமதுகுறைபாடுகள் தொடர்பாக அபிவிருத்திக் குழுவிடம் முறையிட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்குழு தலைவர் ச.கனகரத்தினத்தின் மக்கள் குறைகேள் சந்திப்பு, கள்ளப்பாடு தெற்குப் பொது நோக்கு மண்டபத்தில் கடந்தபுதன்கிழமைநடைபெற்றது. அதில்மக்கள்தமது தேவைகள் தொடர்பான மனுவைக் கையளித்தனர்.

ஆழிப்பேரலைத்தாக்கத்தின்பின்னர்குடியேறியகுடும்பங்களின் காணிகளுக்கு இதுவரை காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. கள்ளப்பாடு பிரதான வீதி அகலிப்பு, கள்ளப்பாடு கிராமத்தின் கிளைவீதிகள் சீரமைப்பு, கடல்கொந்தளிப்பு, வெள்ளப்பெருக்குக் காரணமாகவாழ்வாதாரம்பாதிக்கப்பட்டவர்களுக்குநிவாரணம், பெண்களுக்கு தொழில்வாய்ப்பு, சுனாமி வீட்டுத் திட்டத்திருத்தம், வீதிகளுக்கு மின்விளக்குபொருத்தல், சமுர்த்திவழங்கல் உள்ளிட்ட மக்களின்கோரிக்கைகள் அடங்கியமனும்க்களால்கையளிக்கப்பட்டது. (க-ரி3)

## மானிப்பாய் பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றப்பட்டது

வலி.தென்மேற்கு, டிசெ.13

வலி.தென்மேற்குபிரதேசசபையின்2020ஆம்ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்டம் 5 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ஆதரவாக 15 உறுப்பினர்களும் எதிராக 10 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இரு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். ஒரு உறுப்பினர் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் 2020ஆம் ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்டக்கூட்டம்கடந்தசெவ்வாய்க்கிழமைதவிசாளர்அ.ஜெபநேசன்தலைமையில் சபை மண்டபத்தில்நடைபெற்றது. அதில் கடந்த வாரம் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் சம்பந்தமான விசேட கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதனையடுத்துதிட்டம் நிறைவேற்றப்பட்டது. (க-115)

## மேலதிகமாகப் பிடித்த நிலம் விடுவிப்பு

மடு பிரதேச செயலர் பிரிவின் இரணைஇலுப்பைக்குளம் சந்தியில் 1990க்கு முன்னர் பள்ளிக்குரிய பண்ணை 8 ஏக்கரில் இருந்தது என்று கூறியதால், அதில் பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் 8 ஏக்கரைவிடவும் அதிக நிலத்தில் காடுகளை வெட்டிவிட்டனர். மேலதிக நிலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்று மடுப் பிரதேச செயலர் தெரிவித்தார். மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதில், குறித்த பொதுக் காணியில் மரங்கள் தறிக்கப்பட்டு இடம்துப்புரவுசெய்யப்படுகின்றது. அது ஏன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் விளக்கம் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதேச செயலர் மேற்கண்டவாறு கூறினார். (த-105)





### வவுனியா நகரப் பகுதியில்

## 650 பேருக்கு டெங்கு; பரிசோதகர்கள் களத்தில்

வவுனியா, டிசெ.13

வவுனியாவில் 650க்கும் மேற்பட்டவர்களுக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளதை அடுத்து, வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதர்களால் பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டன.

வவுனியா நகர் முழுவதும் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரவும் சூழல் காணப்பட்ட நெல் களஞ்சியசாலை, இலங்கை மின்சார சபை, தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை, அரச விடுதிகள், பொதுமக்களின் வீடுகள் போன்றவற்றுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க-ரி4)

## பட்டதாரிகளுடன் சந்திப்பு

வவுனியா, டிசெ.13

வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்துப் பட்டதாரிகளுக்குமான சிறப்புக் கலந்துரையாடல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வன்னி மாவட்டப் பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அனுபவப்பகிர்வு, பட்டதாரிகள் கடந்த பத்து வருடங்களாக நிர்வாக ரீதியில் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதல், வேலையற்ற அனைத்துப்பட்டதாரிகளுக்கும் உடனடியாக நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தல், புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் வவுனியா முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான அபிவிருத்திக்கான இணைப்புப் பட்டதாரிகள் சங்கத்தை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

கலந்துரையாடலில் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த 2007 - 2019 வரை பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய அனைத்துப்பட்டதாரிகளையும் தவறாமல் சமுகமளிக்குமாறு வன்னி மாவட்டப் பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (க)

# பனைசார் உணவுகள் கட்டாயம் வேண்டும்

## எவருமே தவறவிடாதீர்கள் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 13

ஒவ்வொருவருமே அன்றாட வாழ்வில் பனைசார் உணவு உற்பத்திப் பொருள்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். முடிந்தளவு சிறு உற்பத்திகளை மேற்கொள்ளல் வேண்டும். பனைசார் உற்பத்திகளில் ஈடுபடுபவர்களுக்கு முடிந்தளவு ஒத்துழைப்பு வழங்கவும் வேண்டும் என்று முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.



வடமராட்சி கரணவாய் மேற்கு கிராம அலுவலகத்தில் பசுமைச் சுவடுகள் அமைப்பு 'பனை விதைப்பும் நடைமுறைச் சிக்கல்களும்' பற்றிய கலந்துரையாடலை கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தியது. அதில் இந்த விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் பனை விதைப்புக்கான காலம், விதைத்தெரிவு, இடத்தெரிவு, விதைக்கும் முறை என்பன பற்றி கலந்துரையாடிய பின்னர் பனைசார் உணவு உற்பத்தி, குடிபான உற்பத்தி, கைவினைப் பொருள்கள் உற்பத்தி என்பனவற்றுக்கு உலக சந்தையில் காணப்படும் கேள்வி, சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகள், உற்பத்திப் பற்றாக்குறை, உற்பத்தியின் தரம், விலை நிர்ணயம், வினைத்திறனான முறையில் உற்பத்திகளை மேற்கொள்ளல் என்பன பற்றி உரையாடப்பட்டன.

பின்னர் பனை வளத்தை வினைத்திறனான முறையில் அறுவடை செய்வதில் மக்களிடம் போதிய புரிதலின்மை, பொருளாதார தேவைகளுக்காக அதிகளவில் பனைகள் அழிக்கப்படுதல், சாதிய வன்முறையின் வகிபாகம், மக்களிடம் ஏற்படவேண்டிய பண்பு மாற்றங்களின் தேவை என்பன பற்றி உரையாடப்பட்டது.

இறுதியாக எதிர்காலத்தில் பனைவிதைப்பில் ஈடுபடும்போது அனைவரும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் சார்ந்து முன்னாயத்தங்களுடன் செயற்படுதல், பனைசார் உணவு வகைகளை நமது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதால் ஏற்படும் ஆரோக்கியமான விளைவுகள், பொருளாதார நன்மைகள் என்பன பற்றி உரையாடப்பட்டது.

### கரையோர மரநடுகை

இதுதவிர, கரணவாயிலும் அதனை அண்டிய கிராமங்களிலும் கோடைகாலத்தில் வீசும் உப்புக் காற்றால் விலங்குகள், மனிதர்கள், தாவரங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் என்பன பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு முதற்கட்டமாக கிராமங்களின் எல்லைப் பகுதிகளில் மரக்கன்றுகளை நடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. (கு-222)



## வீதி சீரமைப்பு

கிளிநொச்சி,டிசெ. 13

பளை இயக்கச்சியில் உள்ள பொது நோக்கு மண்டப வீதியின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த வீதி சீரமைக்கப்படுவதாகச் சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்

வீதியின் சீரமைப்பு பணிகளை புச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் கயன், உறுப்பினர் ரமேஷ் ஆகியோர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (ஐ-6)



## பயிற்சிப்பட்டறை

வவுனியா,டிசெ.13

பொது அமைப்புக்களுக்கான தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன் போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம், அதனை எதற்காக, எவ்வாறு பயன்படுத்துவது போன்ற பல்வேறு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

வவுனியா மாவட்ட உதவிச்செயலர் கமலதாஸ் தலைமையில் இடம்பெற்ற பயிற்சிப் பட்டறையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-110)



## வவுனியா சூரியகுமாருக்கு சமூக சேவையாளர் விருது

வவுனியா,டிசெ.13

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சிறந்த சமூக சேவையாளர் விருது வவுனியாவைச் சேர்ந்த சூரியகுமாருக்கு வழங்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வில் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன், வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் ஆகியோர் இணைந்து விருதை வழங்கினர். (க-ரி4)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.13

மீள்பதிப்புநூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல மூலமும், உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர்கள் இயற்றிய உரை நூலும் வெளியிடப்படவுள்ளன. (க)



*வவுனியா ஓமந்தை அரசர்பதி கண்ணகை அம்மன் ஆலயத்தில் கார்த்திகை தீபத்திருநாள் நேற்றுமுன்தினம் சிறப்புற இடம்பெற்றது.* (க-ரி4)

## முதியவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.13
சைக்கிளில் சென்ற முதியவர் கப்ரக வாகனத்துக்குக் குறுக்கே பயணித்ததால், வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்தார்.
இந்த விபத்து யாழ்ப்பாணம் புங்கன்குளம் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ9 வீதி வழியாக புங்கன் குளம் நோக்கிச் சென்ற கப்ரக வாகனத்துடன், புங்கன் குளம் புகையிரத வீதியில் இருந்து புங்கன் குளம் சந்தியை நோக்கிச் சைக்கிளில் வந்த முதியவர் மோதுண்டார். திடீரென கப்ரக வாகனத்துக்குக் குறுக்காக சைக்கிள் சென்றபோது விபத்து நடந்துள்ளது. (க-106)

## பெரிய வெங்காயத்துக்கு சந்தையில் மவுசு

சாவகச்சேரி சந்தையில் பெரியவெங்காயத்துக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. சந்தையில் சின்ன வெங்காயம் கிலோ 400 ரூபா வரைவிற்பனைசெய்யப்படுகிறது. பாகிஸ்தான் பெரியவெங்காயம்கிலோ 160 ரூபாவாகவும் இந்தியா பெரிய வெங்காயம் கிலோ200ரூபாவாகவும் விற்பனைசெய்யப்படுவதால் நுகர்வோர் பெரிய வெங்காயத்தைக்கொள்வனவு செய்வதில் ஆர்வம்காட்டிவருகின்றனர். பெய்த பெருமழையால் அறுவடைக்குத்தயாராக இருந்தவெங்காயப்பாத்திகள் நீரில் மூழ்கி அழிவடைந்தன. இதனால் சின்ன வெங்காயத்தின் விலை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. (ஐ-9)

### வடக்கு மாகாணத்தில்

# தென்னைகளை சிப்பிலியாட்ட மீண்டும் சூழ்கின்றது நோய்!

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

வடக்கு மாகாணத்தில் தென்னைகளில் தற்போது நோய்த் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாணப் பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் அரியாலை கிழக்கு, முல்லைத்தீவு, பளை, முள்ளிவாய்க்கால், அளம்பில் போன்ற பகுதிகளில் ஒன்று தொடக்கம் 4 வயதுடைய இளம் தென்னைகளில் இந்த நோய்த்தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. தென்னை ஓலைகளின் கீழ் புறத்தில் இருந்து ஒருவகையான பங்கசுத் தாக்கத்தால் ஓலைகள் மஞ்சள் நிறமாக மாற ஆரம்பித்து பின்னர் அந்த ஓலை மண்நிறமாக மாறி மரம் பட்டுப்போகும் நோய்நிலை உருவாகின்றது.
2017 ஆம் ஆண்டு இந்த நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டது. தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் நோய்க்கான காரணங்களை இனம் கண்டனர். கட்டுப்பாட்டு முறைகள் தென்னைப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு நோய்த்தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. தற்போது மீண்டும் சில இடங்களில் இந்த வகை நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நோய் தொடர்பான அறிகுறிகள் தென்னையில் அவதானிக்கப்பட்டால் கற்பக தரு சங்கங்கள் ஊடாக கட்டுப்பாட்டு பொறிமுறைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.(த-7)

## மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகைக்கு ஜன.1இல் கொடி

மட்டுவில், டிசெ. 13
வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. கொடியேற்றம் முற்பகல் 11 மணிக்கு கோவில் பிரதம குரு சிவசக்தி ஸ்ரீராம தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. சப்பறத் திருவிழா ஜனவரி மாதம் 8ஆம்திகதியும்,தேர்த் திருவிழா 9ஆம் திகதிவியாழக்கிழமை காலை 8 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் காலை 8 மணிக்கும் நடைபெறும் என்று கோவில் தர்மகர்த்தா சிவ.பஞ்சாட்சரம்தெரிவித்தார். (த-131)



# ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ. 13
யாழ்ப்பாணம் மாநகர சபையின் சமய விவகார மற்றும் கலை கலாசார பண்பாடு மேம்பாட்டுக்குழுவினரால் ஒளிவிழா நிகழ்வு நடத்தப்பட்டது.
இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் என்.எம்.பாலச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட் , சிறப்பு விருந்தினர்களாக மாநகர சபை பிரதிமுதல்வர் து. ஈசன்,மாநகரசபை ஆணையாளர் த. ஜெயசீலன், மதிப்புறு விருந்தினர்களாகப் பிரதி ஆணையாளர் அ.சீராளன், பிரதம கணக்காளர் திருமதி. உ.இராஜேஸ்வரி, பிரதம பொறியியலாளர் க. கருணாநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.
நிகழ்வில் கரோல் கீதங்கள் பாடப்பட்டமையுடன் இறுதியாக மாநகர சபைக் கலைஞர்களின் இசைச்

# சாவகச்சேரி நகரசபை 2020 பாதீடு தோல்வி

சாவகச்சேரி,டிசெ.13
சாவகச்சேரி நகரசபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டுவரைவை, திருத்தங்களுடன் ஏகமனதாகசபை ஏற்றுக் கொண்ட போதிலும், அதனை நிராகரித்து உறுப்பினர்கள் தோற்கடித்தனர்.
சாவகச்சேரி நகரசபையின் அடுத்த வருட்த்துக்கான உத்தேச பாதீடு வரைவு கடந்த அமர்வின்போது சபை உறுப்பினர்கள், மொத்த செலவீனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாத வகையில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துவரைவைஏற்றுக் கொண்டனர். திருத்தங்கள் செய்யப்பட்ட அறிக்கை நேற்று அமர்வில் தவிசாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. வாக்கெடுப்பின் போது ஆதரவாக ஆறு உறுப்பினர்களும், எதிராகப் பத்து உறுப்பினர்களும் கைகளை உயர்த்தி வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர்.
இரு உறுப்பினர்கள் சபைக்கு வருகை தராமையால் பாதீடு அறிக்கை தோல்வியடைந்தது. (க-9)

## உதவிப் பொருள்கள் சேகரிப்பு

தெல்லிப்பழை,டிசெ.13
கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன விதையனைத்தும் விருட்சமே செயற்பாட்டு குழுவுடன் இணைந்து வெள்ள நிவர்ரணம் சேகரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளன.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களிலும், வீடுகளிலும் தமது அன்றாட வாழ்க்கையை சிரமத்துடன் எதிர்நோக்கும் மக்களுக்கு இந்த உதவிகளை வழங்கவுள்ளனர். இதற்கான நிவாரணப் பொருள்களான உலர் உணவுப்பொருள்கள், பால்மா, நுளம்பு வலை, மருந்து வகைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் நிதியுதவிகள் போதியளவு கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை, மல்லாகம் , சுன்னாகம் , மருதனார்மடம் போன்ற இடங்களில் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் இடம்பெற்றன. பெறப்பட்ட நிவாரணப் பொருள்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை நிவாரணங்கள் கிடைக்கப்பெறாத 40 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



## சண்டிலிப்பாயில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஆற்றுகை

சண்டிலிப்பாய் டிசெ. 13
சண்டிலிப்பாய் பிரதேச எல்லைக்குட்பட்ட பண்டத்தரிப்பு, பிரான்பற்று, மானிப்பாய், சாவற்கட்டு, முள்ளி, மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் டெங்கு ஒழிப்பு தொடர்பான தெருக் கூத்து ஆற்றுகை இடம் பெறவுள்ளது.
டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதால் யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் பணிப்புரைக்கமைய இது இடம்பெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மற்றும் மானிப்பாய் பொலிஸ் ஆகியவற்றின் அனுமதியுடன் சண்டிலிப்பாய் வி.என். அக்கடமி தனியார் கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் வி.கஜரூபனின் வழிகாட்டலில் நிறுவனத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றிணைந்து இதில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-104)

### கல்வியங்காட்டில்

# எம்.ஜி.ஆருக்கு மலரஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 13
திருக்கார்த்திகை விளக்கீடு அன்று யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியிலுள்ள தமிழக முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம்.ஜி. இராமசந்திரனின் சிலைக்கு மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது.
எம்.ஜி. இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி.ஆர் என்று அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தினார்.
தொடர்ந்து வலி.கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர் ராசேந்திரம் செல்வராஜா, நல்லூர்ப் பிரதேசசபை உறுப்பினர் தெய்



வேந்திரம் கிரிதரன், கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் ஆ.கேதீஸ் மற்றும் யாழ். எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினர் ஆகியோரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்தச் சிலையை கோப்பாய் சுந்தரலிங்கம் அமைத்திருந்தார். (த)

### யாழ்.சர்வதேச விமான நிலையத்தில்

# இரட்டிப்பு வரி அறவீடு சரியா?

## விரைவில் தீர்வுகாணுமாறு இந்திய தூதரகத்துக்கு முறைப்பாடு

*யாழ்ப்பாணம், டிசெ. 13*

*யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இரட்டிப்பு வரி அறவிடுவது தொடர்பில், இந்திய அதிகாரிகள் தலையிட்டு அதைக் குறைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தர வேண்டும் என்று குடாநாட்டின் அரசியல்வாதி ஒருவர் இந்தியத் தூதரகத்தின் கவனத்துக்குக்கொண்டு சென்றுள்ளார்.*

இலங்கையின் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக பொதிகள் சென்னைக்குச் செல்லும் சமயம் சென்னை விமான நிலையத்துக்கும் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும் மட்டும் வரி அறவிடப்படுகின்றது.

அந்த வரி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக சென்னை நோக்கிப் பறக்கும் விமானங்களுக்கு மட்டும், யாழ்ப்பாணம், சென்னை, கட்டுநாயக்கா ஆகிய 3 விமான நிலையங்களுக்கும் சேர்த்து வரி அறவிடப்படுகின்றது.

சென்னை கட்டுநாயக்கா ஊடான விமான சேவையில் 30 கிலோ பொதி அனுமதிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் சென்னை இடையிலான விமான சேவையின்போது மட்டும் 15 கிலோ மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றது.

இதேபோன்று சிறிய விமானம் என்பதனால் பயணிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாண விமான நிலையத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் நோக்கிலான செயற்பாடாகவுள்ளது என்று விமர்சிக்கப்படுகின்றது.

எனவே இவற்றை இந்திய விமான சேவை நிறுவனம் ஊடாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் எழுத்தில் கோரியுள்ளார். (த-105)



## கிணறுகளை துப்புரவாக்கும் சிவில் பாதுகாப்புப் பிரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 13

புதுக்குடியிருப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளைத் துப்புரவுசெய்து இறைக்கும் பணிகளில் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு வசந்தபுரம் மற்றும் விசுவமடு கிழக்கு, பாரதிபுரம், மாணிக்கபுரம்போன்றதாழ்நிலப்பகுதிகளில் வெள்ளத்தால் மக்களின் கிணறுகள் அனைத்தும் வெள்ளம் மூடிப் பாய்ந்துள்ளது. இதனால் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். இத்தகைய கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்யும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 15க்கும் மேற்பட்ட கிணறுகள் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. 50க்கும் மேற்பட்ட கிணறுகளுக்கு குளோரின் போடப்பட்டுள்ளன என்றும் முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (த-ரி3)



## முதியோருக்கு உதவிகள்

மனனார்,டிசெ.13



மன்னார் தோட்டவெளியில் உள்ள முதியோர் இல்லத்துக்கு தள்ளாடி 54 படைப்பிரிவினரால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

தள்ளாடி படையணியின் தளபதி இந்திரஜித் பண்டார தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் முதியோர்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாம் மற்றும் அவர்களுக்கு தேவையான சுகாதார அத்தியாவசிப் பொருள்கள், மதிய உணவு என்பன வழங்கப்பட்டன.

முதியோர் இல்லத்துக்கு அருகில் இருந்த காடுகளை பிரிகேடியர் இந்திக்க பண்டாரவின் பணிப்பில் தள்ளாடி இராணுவத்தினர் துப்புரவு செய்தும் வழங்கினர். (ஐ-213)



*வடமராட்சி கிழக்கில்*

## 100 பேருக்கு நிவாரணம்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, மருதங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 பேருக்கு நிவாரணங்கள்வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு அரிமா கழக உறுப்பினர் வேலுப்பிள்ளை பிரசாந்தனின் ஏற்பாட்டில் பருத்தித்துறை, நெல்லியடி, யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு ஆகிய கழகங்கள் இணைந்து நிவாரணங்களை சில நாள்களுக்கு முன்னர் வழங்கின.

ஒவ்வொருவருக்கும் தலா 2ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் 100 பேருக்கு வழங்கப்பட்டன. கடும் மழை காரணமாக வீடுகளில் வசிக்க முடியாமல் தற்காலிகமாக பொது மண்டபங்களில் தங்கியிருந்தவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. (த-160)

## திருத்தி வாசிக்கவும்

யாழ்ப்பாணம், டிசெ. 13

உதயனின் கடந்த 9ஆம் திகதிய பதிப்பின் 12ஆம் பக்கத்தில் வீடமைப்புத் தொடர்பான செய்தியொன்று வெளியானது.

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் பொருத்தமற்ற இடத்தில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றவாறாக அந்தச் செய்தி அமைந்தது. ஆனால் மீள்குடியேற்ற அமைச்சின் வீடுகளே அந்த இடத்தில் அமைக்கப்படுகின்றன. தவறுக்காக வருந்துகிறோம். (ம-7)



## கடலட்டைகளுடன் நால்வர் கைது

மன்னார்.டிசெ.13

சுமார் 350 கடலட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரை மன்னார் பள்ளிமுனை கடற்படையினர் கைதுசெய்தனர். கடலட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை எட்டு மணியளவில் மன்னார் கடற்பகுதியில் இடம்பெற்றது.

சிவில் உடையில் நின்ற கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் நால்வரும் வங்காலை மற்றும் பள்ளிமுனைப் பகுதிகளில் வசிப்பவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மன்னார் மாவட்ட மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

## வெள்ள வாய்க்கால் துப்புரவு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாண நகரில் உள்ள வெள்ள வாய்க்கால்களை துப்புரவு செய்யும் பணியை மாநகராட்சி மன்றம் ஆரம்பித்துள்ளது.

ஒஸ்மானியா கல்லூரி வீதி, கற்குளம் வீதி, ஐந்து சந்தி, அபுபக்கர் வீதி போன்ற இடங்க்ள் ஊடாகச் செல்லும் வெள்ளவாய்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

வாய்க்கால்களில் கழிவுகள் நிரம்பி காணப்பட்டதால் அதனூடாக வெள்ளம் வழிந்தோட முடியாது தடைப்பட்டு இருந்தது.

இந்த வாய்க்கால்கள் தற்போது மாநகர தொழிலாளர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (ஐ17)



*பேராசிரியர் க. கைலாசபதியின் 37 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ)*



## சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 13

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக நேற்றுமுன்தினம் நள்ளிரவு மலையுச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டன என சிவனொளிபாத மலை நாயக்க தேரர் தெரிவித்துள்ளார். இந்தமுறை 4 வீதிகளின் ஊடாக ஊர்வலம் பயணித்தது. இரத்தினபுரிவழியாகவும், ஹற்றன்வழியாகவும் சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொள்ள முடியும்.

சிவனொளிபாதம் கடல் மட்டத்திலிருந்து 7ஆயிரத்து 359 அடி உயரமான கூம்பு வடிவிலான மலையாகும். சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக்கிடையிலான எல்லையில் அமைந்துள்ளது.

மலையுச்சியில் காணப்படும் 1.8 மீட்டர் அளவான பாறை அமைப்பு இந்து சமய நம்பிக்கைகளின் படி சிவனின் காலடிச் சுவடாகக் கருதப்படுகின்றது. ஆனால் கௌதம புத்தரின் காலடிச் சுவடாக பௌத்தர்களால் கருதப்படுகிறது. இஸ்லாமியர்கள் இதை (பாவா ஆதம் மலை) ஆதாமின் காலடிச் சுவடாகக் கருதுகின்றனர். (த)

## வரப்பிரசாதங்களுக்காக அடிபடுகின்றார் ரணில்

கொழும்பு, டிசெ. 13

தனது வரப்பிரசாதங்கள் மற்றும் வசதிகளுக்காக முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு இரண்டு தடவைகள் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல்; இறுதிமுடிவு வெளியிடப்பட்ட நவம்பர் 17ஆம் திகதி அன்று மாலையில் முதலாவது கடிதத்தையும், கடந்த 2ஆம் திகதி இரண்டாவது கடிதத்தையும் முன்னாள் பிரதமர் ரணில் இவ்வாறு அனுப்பி வைத்திருக்கின்றார்.

ஓய்வுபெற்ற முன்னாள் பிரதமராக கௌரவமான முறையில் வாழ்வதற்காகக் குண்டுகள் துளைக்காத அதி நவீன மற்றும் சொகுசு வாய்ந்த கார், 8 பணியாளர்கள், 9 பொலிஸ் வாகனங்கள், அம்புலன்ஸ் வாகனம், சிறப்பு மருத்துவ நிபுணர், அனுபவமிக்க தாதியர், உத்தியோகபூர்வ இல்லம், இலங்கை கடற்படையைச் சேர்ந்த சிறந்த 7 சமையல்காரர்கள், மூத்த பொலிஸ் அதிகாரி தலைமையில் 200 பாதுகாப்பு அதிகாரிகள், அலுவலகம் மற்றும் நிரந்தர செயலர் என்பவற்றை ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய பிரதமரிடம் கோரியுள்ளார்.

அமைச்சரவை அனுமதியைப் பெற்று இந்த வசதிகளை தனக்கு விரைவில் பெற்றுக்கொடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்னாள் பிரதமர் ரணில் கோரியிருக்கின்றார்.

இதேவேளை, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிகவிரைவில் அவற்றை வழங்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த தனக்கு நெருங்கியவர்களிடம் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5.22)

# ராஜபக்ஷ குடும்பத்தை வீழ்த்துவதற்கு முயற்சி

## மகாநாயக்கர்களையும் விலைகொடுத்து வாங்கியுள்ளனர் என்கிறார் தம்மாலோக்க தேரர்



கொழும்பு, டிசெ. 13

ஜனாதிபதி கோத்தாபய உட்பட ராஜபக்ஷ குடும்பத்தை வீழ்த்துவதற்கும், நாட்டை அழிக்கவும் முயற்சி செய்கின்ற சில சக்திகள் ஒருசில மகாநாயக்க தேரர்களையும் விலைகொடுத்து வாங்கியிருப்பதாக கொழும்பு நாரஹேன்பிட்டி எலன் மெத்தினியாராமய விகாரையின் விகாராதிபதி உடுவே தம்மாலோக்க தேரர் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் நெருக்கமாகச் சேர்ந்துகொண்ட ஒருசில நபர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்கும்படியும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு பௌத்த மக்களின் புனித நாள்களில் ஒன்றான உந்துவப் போயா தினமான நேற்றுமுன்தினம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தியாவின் அசோக்க மன்னனின் புதல்வியான சங்கமித்தை பிக்குனி தலைமையில் 11 பிக்குனிகள் வெள்ளரசுக் கிளையை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட தினத்தை நினைவுகூரும் போயா தினமான நேற்றுமுன்தினம் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள விகாரைகளில் வழிபாடுகள் இடம்பெற்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரச போயா பௌத்த மத வழிபாடுகளும், பிரசங்கமும் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றன.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதமரின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, பிரதமரின் மூத்த புதல்வனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பல பிரமுகர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் யானைக் குட்டியை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட கொழும்பு நாரஹேன்பிட்டிய எலன் மெத்தினியாராமய விகாரையின் விகாராதிபதி உடுவே தம்மாலோக்க தேரர் உரையாற்றினார்.

இலங்கையை அழிப்பதற்காக சில சக்திகள், அடிப்படைவாத அமைப்புக்கள், ராஜபக்ஷவினரை அழிப்பதற்கான சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் அதனால் அண்மைய நாள்களாக நெருக்கமாக செயற்படுபவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய உடுவே தம்மாலோக்க தேரர், இலங்கையை அழிப்பதற்கு முயற்சித்து வருகின்ற அடிப்படைவாத சக்திகள், அதற்கான முதற்கட்டமாக ஒருசில மகாநாயக்க தேரர்களையும், பௌத்த தேரர்களையும் விலைக்கு வாங்கியிருக்கின்றன என்றும் குற்றஞ்சாட்டினார். (ஓ.5.22)

## தங்கம் கடத்தியவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு தங்க பிஸ்கட்டுகளை மிகவும் சூட்சுமமாக மின் விசிறி பெட்டியில் மறைத்து இலங்கைக்குள் கொண்டுவர முயற்சித்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சுங்க வரி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குருணாகல் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 45 வயதான பொறியியலாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள

# கைதிகளை விடுவிக்க முடிவு அமைச்சர் நிமல் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 13



நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறந்த ஒழுக்கத்துடன் செயற்பட்ட கைதிகளை மறுவாழ்வளித்து விடுதலை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறந்த ஒழுக்கத்துடன் இருந்த கைதிகளை சமூகத்துடன் மீளிணைப்பது தொடர்பில் சட்ட மாஅதிபர் அடங்கலாக நீதித்துறையுடன் பேசி உகந்த திட்டமொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கவுள்ளேன் என்றார் அமைச்சர் நிமல்.

பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புள்ள மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், பாலியல் துர்நடத்தை, கொலை போன்ற பாதூரமான குற்றங்களுடன் தொடர்புள்ளவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட மாட்டார்கள் எனவும் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறைச்சாலைகளுக்குள் கைதிகளுக்கு இடப்பற்றாக்குறை காணப்படுகின்றது. மூன்று மடங்கு கூடுதலாக கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு போதைப்பொருளுடன் தொடர்புள்ள வழக்குகளின் தொகை 150 மடங்கால் உயர்ந்துள்ளது. அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் தாமதமடைவதே வழக்குகளின் தாமதத்துக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகளுடன் கடந்த வாரம் பேச்சு நடத்தியதில் தாமதமின்றி அறிக்கைகளை வழங்கும் முறை குறித்து ஆராயப்பட்டது.

கைதிகளை சமூகத்துடன் மீள் ஒருங்கிணைப்பது தொடர்பில் திட்டமொன்றை சிறைச்சாலைத் திணைக்களம் முன்னெடுக்க வேண்டும். சிறைகளுக்குள் இருந்து குற்றச்செயல்களுக்குத் தூண்டும் கைதிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக சிசிரிவி தொகுதிகளை சகல சிறைச்சாலைகளிலும் அமைக்கவுள்ளதாகவும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஓ.5.22)

## மத்தள விமான நிலையம் விற்பனைக்கு அல்ல

பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

மத்தள விமான நிலையத்தை விற்பனை செய்வதற்கு அரசு தயாராக இல்லை என, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

உடுகம்பொலவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

'கடந்த காலங்களில் முன்னைய அரசு ஏற்




படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள் குறித்து புதிய அரசின் முடிவு என்ன என' ஊடகவியலாளர்கள் வினவிய போதே மத்தள விமான நிலையத்தை விற்பனை செய்வதற்கு அரசு தயாராக இல்லை என, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (ம)

# மின் தடை அறிவிப்பு

வடக்கின் பல பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை ஒரு பகுதி, கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம் ஒரு பகுதி, உதயபுரம், மணியம் தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் கணேசபுரம் கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## காரைநகர் பிரதேசசபை
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2020

2020ம் ஆண்டு காரைநகர் பிரதேசசபைக்குத் தேவையான கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் முகவர்கள்/ வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | விவரம் - பொருள்கள் |
|---|---|
| 1 | அனைத்து அலுவலக எழுதுபொருள்கள், அச்சிடப்பட்ட எழுதுபொருள்கள்.படிவங்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கல். |
| 2 | அனைத்து அச்சிடல் நடவடிக்கைகள். |
| 3 | கணினிகள், கணினிமென்பொருட்கள்.Toner வகைகள். |
| 4 | நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம். அவற்றுக்கான உதிரிப்பாகங்கள். |
| 5 | சுகாதாரசேவைப் பொருட்கள் மற்றும் தடுப்புக்காப்பு உபகரணங்கள். |
| 6 | மின்சார உபகரணங்கள் மற்றும் வீதிவிளக்குஉபகரணங்கள். |
| 7 | நூலகங்களுக்கான நூல்கள். |
| 8 | நீர் வழங்கும் குழாய்கள். கியூம் பைப்கள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| 9 | வுாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| 10 | மின் வழங்கும் பொருட்கள்.மின் பாவனைப் பொருள்கள் |
| 11 | வாகனங்களுக்கானரயர் ரியூப் மற்றும் மின்கலங்கள், ரயர் மீள் நிரப்புதல் |

| உருப்படி இலக்கம் | விவரம் - சேவைகள் |
|---|---|
| 12 | அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள், ஞாபகார்த்த பலகை தயாரித்தல் |
| 13 | வாகனங்களுக்கான அனைத்து வகையான சுத்திகரிப்பு (Service) |
| 14 | கணினி, தட்டச்சுபொறி.பக்ஸ் இயந்திரம்.நகல் பிரதி இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| 15 | உள்ளக தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல், பராமரிப்பு |
| 16 | சகல வாகனங்களுக்குமான திருத்தவேலைகள் |
| 17 | இறப்பர் முத்திரை தயாரித்தல். |
| 18 | பாவிக்கப்பட்ட பத்திரிகை, பழைய இரும்பு கொள்வனவு செய்தல் |
| 19 | அலுவலக மரத்தளபாடங்களை பழுதுபார்த்தல் (பின்னுதல், பொலிஷ்) |

| உருப்படி இலக்கம் | விவரம் - ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்) |
|---|---|
| 20 | கட்டட நிர்மாண வேலைகள் |
| 21 | கிணறு, குழாய்க்கிணறு அமைத்தல் |
| 22 | வீதி நிர்மாண, திருத்த வேலைகள் |

### நியந்தனைகள்

01. வழங்குநர்களாக பதிவுசெய்தல் 2020ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
02. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு உருப்படிக்குமாக வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களுக்கான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக ரூபா250.00 காசாக செலுத்தப்பட வேண்டும். மேலும் அனைத்து விண்ணப்பங்களும் ஒரே தபாலுறையில் சேர்த்து அனுப்பி வைக்கப்படவேண்டும். படிவங்களை அலுவலக நேரங்களில் காரைநகர் பிரதேசசபையில் பெற்றுக்கொள்ளலாம்.
03. விண்ணப்பங்கள் இடப்பட்டு அனுப்பும் தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் **"வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2020"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசாளர், காரைநகர் பிரதேச சபை, காரைநகர் எனும் முகவரிக்கு 27.12.2019ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
04. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை தவிசாளர் கொண்டுள்ளார்.
05. பொதுவாக பதிவு செய்து கொள்ளப்பட்ட வழங்கல்கள், சேவை வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டு பண்டங்கள் சேவைகள், வேலைகள் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தேவைப்படும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் கிடைக்காத பட்சத்தில் புறம்பாகவெளி நிறுவனங்களிடமிருந்தும் விலைமனுக்கோரி கொள்வனவு மேற்கொள்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் வழங்கும் உரிமை என்பன காரைநகர் பிரதேசசபை தவிசாளருக்கு உரியதாகும்.
06. விலைமனுக்கோரும்போது முன்வராத, கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்களை வழங்காத, சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத, வழங்குநர்களின் பெயர்கள் முன்னறிவிப்புக்கள் இன்றி பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**வி.கேதீஸ்வரதாஸ்,**
**தவிசாளர்,**
**காரைநகர் பிரதேச சபை**
**தொலைபேசி இல:-0212251735** **13.12.2019**



## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை
## இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கடைகள், பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகள் என்பவற்றை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான
## கேள்விஅறிவித்தல் - 2020

பளை பிரதேச எல்லைக்குட்பட்ட இயக்கச்சி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ்வரும் கடைகளினை 01.01.2020 ஆம் திகதியிலிருந்து நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு எம்மால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** : - 13.12.2019 தொடக்கம் 27.12.2019 பிற்பகல்2.00 மணிவரை (அலுவலக நேரம்)
**கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி** :- 27.12.2019 பிற்பகல் 2.00 மணி
**கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி** :- 27.12..2019 பிற்பகல் 2.00 மணி
**கேள்விதிறக்கப்படும் இடம்** :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்.

இயக்கச்சி சந்தை வளாக கடைகள்

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புபணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS- 03 | 75,000.00 | 7500.00 | 2000.00 |
| 02 | VS - 04 | 75,000.00 | 7500.00 | 2000.00 |
| 03 | PS -04 | 150,000.00 | 15,000.00 | 2000.00 |
| 04 | PS -06 | 120,000.00 | 12,000.00 | 2000.00 |
| 05 | PS -07 | 120,000.00 | 12,000.00 | 2000.00 |
| 06 | PS -08 | 105,000.00 | 10,500.00 | 2000.00 |
| 07 | PS -09 | 105,000.00 | 10,500.00 | 2000.00 |
| 08 | PS -10 | 105,000.00 | 10,500.00 | 2000.00 |
| 09 | PS -11 | 96,000.00 | 9600.00 | 2000.00 |
| 10 | PS -12 | 96,000.00 | 9600.00 | 2000.00 |
| 11 | PS -13 | 96,000.00 | 9600.00 | 2000.00 |
| 12 | PS -14 | 96,000.00 | 9600.00 | 2000.00 |

பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகள்

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புபணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BUS - 01 | 336,000.00 | 33,600.00 | 2000.00 |
| 02 | BUS - 02 | 336,000.00 | 33,600.00 | 2000.00 |
| 03 | BUS - 03 | 570,000.00 | 57,000.00 | 2000.00 |

### நியந்தனைகள் :-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 27.12.2019 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும். என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு** :- கடை இல VS -03 , VS – 04 மரக்கறி, வெற்றிலை, பழங்கள் வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை.** **13.12.2019**

(in.11945) (13.17)

# ஊடகங்களை கட்டுப்படுத்த மிக விரைவில் புதிய சட்டம்!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 13

தேர்தல் காலத்தில் அரச, தனியார் ஊடகங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் புதிய சட்டத் திருத்தங்களை உடன் கொண்டுவருகின்றமை தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நடைமுறையில் உள்ள ஒழுக்க விதிகளின் படி அரச ஊடகங்களை மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பதால், தனியார் ஊடகங்களுக்கு அறிவுறுத்தல்களை மட்டுமே வழங்க முடியும். அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலின்போது இந்த விடயத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டியதன் அவசியத்தையும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் ஆராய்தோம்.

சகல ஊடகங்களும் நேர்மையாகவும், பாரபட்சமின்றியும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். சட்டத்தில் முழுமையான திருத்தங்களைச் செய்து ஒழுக்க விதிக்கோவையை தயாரிப்பது குறித்துக் கவனம் செலுத்தினோம்.

சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டால் நடைமுறைப்படுத்தலாம். அனைத்து ஊடகங்களுக்கும் பொதுவான ஒழுக்க விதிக்கோவையைத் தயாரிப்பதே ஆணைக்குழுவின் நோக்கம்.

அதே சமயம் எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தலின்போதும், ஏனைய தேர்தல்களின் போதும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயாதீன குழுக்கள் பின்பற்றவேண்டிய விதிகளை மறுசீரமைப்பது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஆணைக்குழுவின் பரிந்துரைகள், எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். நாம் எடுக்கும் முடிவுகளை எம்மால் சட்டமாக்க முடியாது. நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டால் அன்றி ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஒ.5,22)

# காற்றாலை விவகாரம் சிறிதரன் எம்.பி. ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்ப்பாணத்தை நோக்கி நகரும் இராட்சத குழாய்கள் தொடர்பான விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேரில் சென்று ஆராய்ந்தார்.

சாவகச்சேரி மறவன்புலவில் அமைக்கப்படவுள்ள காற்றாலை நிலையத்துக்கு, 8 குழாய்கள் அந்தப் பகுதியில் இறக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பில்மக்கள்நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் விவரங்களை ஆராய்ந்தார்.

"இந்த திட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், திட்டம் தொடர்பாக மக்களிடம் அச்சம் உள்ளது. இதுவரை நிறுவனமோ, அரசோ அதனை நிவர்த்தி செய்யவில்லை. அனைத்து அனுமதிகளும் கொழும்பில் பெறப்பட்டுள்ளன. இப்படியான திட்டங்களை மேற்கொள்ளும்போது, வருமானத்தின் 15 வீதம் அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றத்துக்கு வழங்கப்பட வேண்டும். நிறுவனம், இந்தப் பகுதி மக்களுக்கு என்ன செய்யப் போகிறது என்பதை இதுவரை தெளிவுபடுத்தவில்லை. குறைந்த விலையான காணிகளை அதிக விலைக்கு நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது.

பாதைகள் அடைக்கப்பட்டுள்ளன. காற்றாலையால் ஏதாவது பக்க விளைவுகள் உள்ளனவா போன்ற சந்தேகங்கள் மக்களிடம் உள்ளன. இவை தான் மக்களை அச்சப்படுத்தியுள்ளது. இவை தொடர்பில் நிறுவனம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

அதேவேளை உருளை வடிவ பீப்பாய்களை நிறுவி, அதன் மேல் காற்றாடிகள் அமைக்கப்படவுள்ளன. 350 அடி உயரத்தில் காற்றாடிக்ள் பொருத்தப்படும். காற்றாடி விசிறிகள் ஒவ்வொன்றும் 200 அடி நீளமானவையாக இருக்கும். தரையிலிருந்து 400 அடிக்குச் சற்று மேல் வரை காற்றாடி விசிறிகள் சுழலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 8 காற்றாடிகளின் மூலமாக 20 மெகா வோட்ஸ் மின் சாரத்தை அந்த நிறுவனம் உற்பத்தி செய்து, தேசிய மின் கட்டமைப்புக்கு விற்பனை செய்யவுள்ளது. ஒவ்வொரு அலகும் 12.75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். அதை அரசு 23 ரூபாவுக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

## நிசாந்த சில்வா விவகாரம்:

# விரைவில் முடிவு

கொழும்பு, டிசெ. 13

பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவின் ஆய்வாளர் நிசாந்த சில்வா சுவிட்சர்லாந்தில் புகலிடம் தேடியுள்ள விவகாரம் தொடர்பாக, எதிர்கால நடவடிக்கை குறித்து அரசு விரைவில் முடிவெடுக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சுவிஸ் தூதுரக அதிகாரி கடத்தப்பட்டது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையில், நிசாந்த சில்வா விவகாரத்தையும் எழுப்புவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. எனினும், இந்த விவகாரத்தின் சிக்கல் தன்மை கருதி, இறுதி முடிவு எடுக்கப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என்று அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாட்டை விட்டுச் சென்ற நிசாந்த சில்வாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்க்கை எடுக்கப்படக் கூடும் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (ஒ.5)

# புலிகள் கட்சியை புதுப்பிக்கும் பெண்

யாழ்ப்பாணம்,டிசெ.13

விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணிஎன்னும்அரசியல் கட்சியையும், அதன் சின்னத்தையும் வழங்குமாறு பெண்ணொருவர் தேர்தல் ஆணைக்குழுவை நாடியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கிய காலத்தில் புலிகளின் அரசியல் பிரிவான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்னும் அமைப்பு தேர்தல் செயலகத்தில் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

1989ஆம்ஆண்டின் இறுதிப்பகுதியில்பதிவுசெய்யப்பட்ட கட்சியின் சின்னமாகப் பாயும் புலி பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் போர்க் காலத்தில் செயற்படாது இருந்த கட்சிஎனத்தெரிவித்து, கட்சியின்பதிவு 2006 ஆம் ஆண்டுடன் நீக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தக் கட்சியின் பதிவை மீள வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எனினும்கட்சியின்பெயரையோஅல்லதுசின்னத்தையோ தற்போது வழங்க தேர்தல் ஆணைக்குழு மறுத்து விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-105)

# தமிழ்த் தேசம் ஊமையாகவே உள்ளது

## வணபிதா லிங்கேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

போர் முடிவடைந்து இன்று வரைக்கும் எமது தேசம் ஊமையாகவே இருக்கிறது என்று வணபிதா. எஸ். லிங்கேஸ்வரன் தெரிவித்தார்.

தென்னிந்திய திருமண்டலத்தின் 'சேவா' எனும் அமைப்பு தனது திருச் சபையிலுள்ள சிறப்புத் தேவையுடையோரை சமூகத்துடன் இணைப்பது தொடர்பாகவும் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவும் அவர்களின் தனித்துவத்தை உலகுக்குப் பிரதிபலிக்கும் வகையிலும் சிறப்புத் தேவையுடையோரைப் பராமரிக்கின்ற இல்லங்களின் காப்பாளர்களையும் இணைத்துக் கொண்டு நிகழ்வொன்றை சென்னையில் அண்மையில் நடத்தியது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசின் போர்வெற்றி எமது தேசத்துக்கு வீதிச் சீரமைப்பு, மின்சார் வசதி மற்றும் வீட்டுத்திட்டம் உட்பட பல புதிய விடயங்களைக் கொண்டு வந்தது. எனினும் விழுப்புண் அடைந்து சிறப்புத் தேவ்வயுடையோராக்கப்பட்ட 23 ஆயிரத்துக்கும் அதிகமான போர்ாளிகள், பொதுமக்க்ள் போன்றோர் இன்று வரை அடிப்படை வசதிகளற்று இருக்கிறார்கள். அவர்களுக்கென்று பொருத்தமான தொழில் வாய்ப்பை அல்லது சுயமாக வாழும் நிலைமையை அரசோ அரசசார்பற்ற நிறுவனங்களோ அல்லது புலம்பெயர் அமைப்புகளோ போதுமான வகையில் எற்படுத்திக்கொடுக்கவில்லை. இன்றும் சமூகத்தோடு இணைந்து வாழமுடியாதவர்களாக நடைப்பிணங்களாக மாற்றுத்திறனாளிகளாக முன்னாள் போராளிகளும் பொதுமக்களும் கடினமான சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தேசத்தின் விடிவுக்காய் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் "அண்ணன் பிரபாகரன் இருந்திருந்தால் நாம் மாற்றத்தை ஏற்படுத்தும் திறனாளிகளே அன்றி மாற்றுத்திறனாளிகள் அல்லர்" என்பதே - என்றார். (து-104)

# ரூ.6,000 கொடுப்பனவை இழுத்தடிப்பது ஏன்?

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வியெழுப்புகின்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 13

6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறுவதற்கு விண்ணப்பித்த காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் 712 பேருக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என்றுகூறியபோதும், நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக ஏமாற்றப்படுகின்றோம் என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல ஆயிரம் பேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்கு அரசு 2019ஆம் ஆண்டின் பாதீட்டில் நிதி ஒதுக்கியது. அவ்வாறு ஒதுக்கிய நிதியைப் பெறுவதற்காகவே குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

712 பேருக்கும் கொடுப்பனவு வழங்கும் நோக்கில் தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டது.

எனினும், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அலைச்சலும் கையிலிருந்த பண விரயமும் மட்டுமே ஏற்பட்டுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர். (து-105)

## தூதரகப் பணியாளரை

# சிறை வைக்க முயற்சி

ஒஸ்லோ, டிசெ. 13

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகப் பணியாளர் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்தார் என்று தெரிவித்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தயாராகி வருவதாகக் தகவல்கள் கசிந்துள்ளன.




சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் என்றும், பாலியல்துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து, அவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 3 நாள்களாக, 19 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தினர்.

விசாரணைகள் முடிவடையாத நிலையிலேயே, இது ஒரு நாடகம் என்றும், அரசுக்கு எதிரான சூழ்ச்சி என்றும் அரசின் அமைச்சர்களும், பாதுகாப்புச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் கூறி வருகின்றனர். சிங்கள ஊடகங்கள் சிலவும், பெண் பணியாளர் பற்றிய தனிப்பட்ட தகவல்கள், படங்களை வெளியிட்டும், அவரைக் குற்றவாளியாக சித்திரித்தும் செய்திகள், தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

தூதரக அதிகாரி கடத்தப்பட்டமை திட்டமிட்ட நாடகம் என்ற அரசின் முடிவு அறிவிக்கப்பட்டு விட்ட நிலையிலேயே, விசாரணைகள் நடந்து வருகின்றன. சுவிஸ் தூதரக அதிகாரியை பொய்யான குற்றச்சாட்டை கூறியதாக சிறையில் அடைப்பதற்கு திட்டமிடப்படுவதாக கூறப்படுகிறது.

சுவிஸ் தூதரக அதிகாரி தான் கடத்தப்பட்டதாக பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தால், குற்றவியல் சட்டத்தின் கீழ், அவருக்கு 2 தொடக்கம் 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க முடியும் என்று சட்டவாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டவாளர் யூ.ஆர். டி.சில்வா தெரிவித்துள்ளார். அவர் ஒரு தவறான அறிக்கையை வெளியிடுவதற்கு யாராவது உதவி செய்திருந்தால், அவர்களும் தண்டிக்கப்பட முடியும் என்றும் அவர் கூறினார்.

'குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் அறிக்கை அளிக்கும்போது, தனது தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட வேறு பெயரை அவர் பயன்படுத்தியிருந்தால், அது ஒரு குற்றமாகும். எந்தவொரு குடிமகனும், தேசிய அடையாள அட்டையில் உள்ள பெயர்களைத் தவிர வேறு பெயர்களைப் பயன்படுத்த முடியாது. இந்தச் சம்பவம் குறித்து அவரிடமிருந்து சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் கூறிய தகவல்கள் தவறானவை என்று தெரியவந்தால், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் அவர் மீது குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்கும், என்றும் யூ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார். (ஒ,5)

## பல்டி அடிக்கும் பெரமுன

### எம்சிசி உடன்பாட்டுக்கு தயாராகுகிறது அரசு?

கொழும்பு, டிசெ. 13

புதிய அரசு மிலேனியம் சவால் நிறுவனத்துடன் (எம்சிசி) கொடை உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்குத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது, அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் கொடையை பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அப்போது எதிர்க்கட்சியாக இருந்த சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் அதன் பங்காளிக் கட்சிகளும், எம்சிசி உடன்பாடு நாட்டின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், அதில் கையெழுத்திடக் கூடாது என்று கடுமையான பரப்புரைகளை மேற்கொண்டன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தத் தீவிரமான பரப்புரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடும் நெருக்கடியையும் பின்னடைவையும் ஏற்படுத்தியிருந்தது. கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு பதவிக்கு வந்த பின்னரும், எம்சிசி உடன்பாட்டில் கையெழுத்திடப் போவதில்லை என்றே கூறியிருந்தது.

ஆனால், தற்போது அரசு எம்சிசி உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசில் உள்ள சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், எம்சிசி உடன்பாட்டில் 70 வீதம் நல்லது என்று கூறியிருக்கிறார்கள். அடுத்து அவர்கள் உடன்பாட்டின் 90 வீதம் நல்லதே என்று கூறக் கூடும். எம்சிசி உடன்பாட்டில் தற்போதைய அரசு கையெழுத்திட்டால் கூட ஆச்சரியமில்லை' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எம்சிசி கொடையின் 70 வீதம் போக்குவரத்து துறை அபிவிருத்திக்கே பயன்படுத்தப்படவுள்ளது, இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று, அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# மஹிந்தவுக்கு 88: சமலுக்கு 31

## நிறுவனங்கள் ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ. 13

கோத்தாபய அரசின் அமைச்சுக்களுக்கான துறைகள், நிறுவனங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ், அதிகபட்சமாக 88 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. பொலிஸ் உள்ளிட்ட 31 அரச நிறுவனங்கள், பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

முன்னைய அரசில் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களம் தற்போது பாதுகாப்பு அமைச்சின்கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது.

நிதி மற்றும் பொருளாதார கொள்கை அபிவிருத்தி அமைச்சின் கீழ் 48 நிறுவனங்களும், புத்தசாசன, கலாசார, மற்றும் மத விவகார அமைச்சின் கீழ் 23 நிறுவனங்களும், நகர அபிவிருத்தி, நீர் விநியோகம், மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் 17 நிறுவனங்களுமாக, மொத்தம் 88 நிறுவனங்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வசமுள்ள அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுவரை பாதுகாப்பு அமைச்சராக யாரும் நியமிக்கப்படாத நிலையில், சமல் ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சராகப் பதவி வகிக்கும் பாதுகாப்பு அமைச்சின் கீழ், 31 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

பொலிஸ், முப்படைகள், சிவில் பாதுகாப்புப் படை, குடிவரவு, குடியகல்வு திணைக்களம், அரச புலனாய்வுச் சேவை, ஆள் பதிவுத் திணைக்களம், வளிமண்டலவியல் மற்றும் இடர் முகாமைத்துவ மையம் ஆகியனவும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் ஆகியன நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. (ஒ,5)

## குரே மீது தாக்குதல்

பாணந்துறையில் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளார். மக்கள் சந்திப்பில் கலந்து கொள்வதற்காகச் சென்ற போது இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

இரண்டு தரப்புக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ரெஜினோல்ட் குரே மீது கொடூரமாக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னாள் ஆளுநர் சென்று கொண்டிருந்த வீதியை மறித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கு சென்ற ரெஜினோல்ட் குரேவை பொதுமக்கள் சுற்றி வளைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். பொலிஸார் தலையிட்டு இரண்டு பிரிவுகளையும் கலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். (ஒ,5)

## பாடசாலைகளது ஆளணியை ஒழுங்குபடுத்துவதற்குக் குழு!

கொழும்பு, டிசெ.13




நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளினது ஆளணியை ஒழுங்குபடுத்துவதற்கும், ஆசிரியர்கள் நியமனத்தில் விஞ்ஞான ரீதியிலான ஆய்வை முன்னெடுத்து பாடங்களை வழங்குவது உள்ளிட்ட பணிகளை முன்னெடுப்பதற்கு மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுகள் இணைந்த குழு ஒன்று அமைக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சுக்கும் மாகாண கல்வி அமைச்சுக்கும் இடையிலான இடைவெளி குறைக்கப்படும் என்றும் கல்வி அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது. 9 மாகாணங்களின் கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கொழும்பு கல்வி அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கருத்தமர்விலேயே இந்தத் தகவலை கல்வி அமைச்சின் அதிகாரிகள் வெளியிட்டனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அரசின் கொள்கைகளை வெளிப்படுத்தும் கருத்தமர்வாக இது இடம்பெற்றது.

நாட்டில் உள்ள அனைத்து தேசிய கல்வியற் கல்லூரிகளும் பல்கலைக் கழகப் பீடங்களாக தரமுயர்த்தப்பட்டு அவற்றில் ஆசிரியர் கற்கைகளை நிறைவு செய்வோர் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படுவர். மாகாண கல்வி அமைச்சுகளுக்கும் மத்திய கல்வி அமைச்சுக்கும் இடையே நிர்வாக ரீதியாக தற்போது பெரும் இடைவெளி காணப்படுகிறது. அதனால் இனிவரும் காலங்களில் அந்த இடைவெளி குறைக்கப்படும் என்று கல்வி அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# ஷாபிக்கு எதிராகப் புதிய விசாரணை

கொழும்பு, டிசெ.13

சிங்களத் தாய்மார்கள் கருவுறாமல் இருக்கும் வகையில் மகப்பேறு சிகிச்சைகளை மேற்கொண்டார் என குற்றஞ்சாட்டப்பட்ட குருநாகல் மருத்துவமனை மருத்துவர் மொகமட் ஷாபி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க புதிய அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

ஏற்கனவே பெறப் பட்ட சாட்சியங்களை மீண்டும் பெறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மருத்துவர் ஷாபிக்கு எதிராக எந்த ஆதாரமும் கிடைக்காததால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (எ)




# புத்தாண்டு ராசிபலன்




## 2020ஆம் ஆண்டு யோகங்கள் உங்களைத் தேடி வரவுள்ளன

**முன்னேற்றம் தரும் மாற்றம்**

புத்தாண்டில் கடக ராசிக்கு சனி ஏழாம் வீடு குரு ஆறாம் வீட்டில் அமர்ந்திருக்கின்றன. களத்திர ஸ்தானத்தில் சனி. ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் குரு. தொழில் ஸ்தானத்தில் சனி அமர்கிறார்.

சனி ஆட்சி பெற்று அமரும் காலத்தில் செவ்வாய் இணையும் போது சவால்கள் அதிகம் இருக்கும். செய்யும் தொழிலில் அவதானமாக இருத்தல் வேண்டும். புதிய தொழில் மாற்றங்கள் ஏற்படும். பயணங்கள் நல்லவிதமாக வெற்றிகரமாக அமையும். திருமண வாழ்க்கையில் திடீர் தடைகள் ஏற்படும் . ஆயினும் சுபமாக முடியும்.

**தொழில் முன்னேற்றம்**

எதிர்பார்த்த நிறுவனத்தில் எதிர்பார்த்த வேலை கிடைக்கும். இலாபமும் கிடைக்கும். காரணம் சனி ஏழாம் வீட்டிலும் குரு ஆறாம் வீட்டில் அமர்ந்து இரண்டாம் வீட்டையும் பார்ப்பது சிறப்பு. சுய தொழில் தொடங்குபவர்களுக்கு இலாபம் கிடைக்கும். குரு 6இல் இருந்து உங்கள் தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்தைப் பார்ப்பதால் நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் கூடும். நீங்கள் எதிர்பார்க்கும் சம்பள உயர்வும், பதவி உயர்வும் கிடைக்கும். எதற்கும் எச்சரிக்கையாகவே இருங்கள்.

**படிப்பில் கவனம்**

மாணவர்கள் இந்த ஆண்டு கொஞ்சம் கவனமாக இருங்கள். காரணம் ஆறாம் வீட்டில் குரு அமர்ந்திருக்கிறார். போட்டிகளை உருவாக்குவார் படிப்பில் ஆர்வத்தை கொடுப்பார். 5இல் குரு இருந்து பல நல்ல பலன்களைக் கொடுத்து இருந்தாலும், தற்சமயம் 6ஆம் இடத்தில் மறையப் போகின்றார். 6இல் இருந்து 12ஆம் இடமான விரய ஸ்தானத்தை பார்க்கின்றார்.

இதனால் படிப்பதில் பல நன்மைகள் இருந்தாலும், சோம்பேறித்தனம் வரும். அதிகாலையில எழுந்து படியுங்கள். கவனமாக படித்தால் நிறைய மதிப்பெண் வாங்கலாம்.

**ஆரோக்கியத்தில் அக்கறை**

உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். கடந்த சில வருடங்களாகவே மிகவும் உற்சாகமாக இருந்தீர்கள். இந்த வருடம் வயிறு பிரச்சினைகள் எட்டிப்பார்க்கும். சாப்பாட்டு விடயத்தில் கவனமாக இருங்கள். நேரத்துக்குச் சாப்பிட வேண்டும். உங்களின் வாக்குவன்மை அதிகரிக்கும். புதிய உறவுகள் தேடிவரும். உறவினர்களிடம் வாக்குவாதம் செய்வதை தவிர்த்து, விட்டுக் கொடுத்து செல்லுங்கள் பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**வெளிநாட்டு வாய்ப்பு**

2020ஆம் ஆண்டில் நல்ல யோகங்கள் கிடைக்கப் போகின்றன. குருவினால் விபரீத ராஜயோகம் கிடைக்கப் போகிறது. வங்கியில் கடன் கிடைக்கும். வீடு கட்டுவதற்கு கடன் வாங்குவீர்கள். குடும்ப ஸ்தானத்தை குருபகவான் பார்க்கிறார். பிரிவினைகள் தீரும் காலம் வந்து விட்டது. கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும். கணவன் - மனைவி உறவில் அந்நியோன்னியம் அதிகரிக்கும். வெளிநாடு வாய்ப்பு தேடி வரும்.

**யோகமான ஆண்டு**

2020 நல்ல வ்ருடம்தான் என்றாலும் சவால்களை எதிர்கொள்ளும் வருடமாக அமையும். போட்டி பந்தயங்களில் வெற்றிகள் கிடைக்கும். இத்தனை ஆண்டுகாலம் சனிபகவான் உங்களுக்கு யோகங்களை கொடுத்து வந்தார். இனி நிறைய சவால்களைச் சந்திக்க நேரிடும். ஏழுக்குடைய சனி ஏழாம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்கிறார். வெள்ளிக்கிழமை முருகப்பெருமானை வழிபட நன்மைகள் நடக்கும்.

# புதிய நாள்காட்டியை எந்த திசையில் வைத்தால் அதிர்ஷ்டம்?




ஒருவழியாக 2019 முடிந்து 2020 தொடங்கப்போகிறது. புதுவருட நாள்காட்டி வாங்குவது மிகவும் எளிதானது. ஆனால் அதற்கும், வாஸ்துவுக்கும் உள்ள தொடர்பு மிக நீண்டது.<

பழையநாள்காட்டியை ஒருபோதும் உங்கள் வீட்டுக்குள் வைத்திருக்கக்கூடாது. இது உங்கள் வீட்டில் வாஸ்து தோஷத்தை ஏற்படுத்தும். மேலும் புது நாள்காட்டியை தவறான இடத்தில் மாட்டுவதும் வாஸ்து தோஷத்தை ஏற்படுத்தும். வாஸ்து சாஸ்திரத்தின் படி, எந்தவொரு பொருளையும் தெற்கு திசையில் தொங்கவிடக்கூடாது. நேரத்தைக் குறிக்கும் கடிகாரம், நாள்களைக் காட்டும் நாள்காட்டி என அனைத்தையும் ஒருபோதும் தெற்கு திசையில் தொங்கவிடக் கூடாது.

இதற்கு மாற்றாக வடக்கு திசையில் நாள்காட்டியை வைக்கலாம். கிழக்கு, மேற்கு என அனைத்து திசைகளும் நேர்மறை ஆற்றலை குறிப்பதாகும்.

நீங்கள் படங்களுடன் இருக்கும் நாள்காட்டியை பயன்படுத்த விரும்பினால் அதில் வன்முறை, வேதனைப்படும் மிருகங்கள் போன்றவற்றின் படம் இருக்கக்கூடாது. இந்த படங்கள் வீட்டில் எதிர்மறை ஆற்றலை பரப்புகின்றன மற்றும் சிறு குழந்தை களின் மனதில் மோசமான தோற்றத்தை ஏற்படுத்தும். இந்த புத்தாண்டில் உங்கள் வீட்டை மாற்றியமைக்க நினைத்தால் அதனை சரியாக செய்யுங்கள். இதேவேளை, அழுக்கு கண்ணாடிகள் இருள் மற்றும் மனச்சோர்வை அழைக்கின்றன. எனவே உங்கள் கண்ணாடியை ஈரமான துணியால் தவறாமல் சுத்தம் செய்யுங்கள். தூங்கும்போது உங்கள் கண்ணாடியை மூடிவைப்பதை வழக்கமாக வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் இது உங்கள் வீட்டுக்குள் எதிர்மறை சக்திகள் நுழைவதைத் தடுக்கும்.

# ஓமந்தையில் விபத்து 4 சிப்பாய்கள் காயம்

வவுனியா, டிசெ. 13

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் நான்கு இராணுவத்தினர் உட்பட ஐவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

புளியங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி சென்ற இராணுவ வாகனம் ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் வைத்து பட்டா ரக வானுடன் மோதியதை அடுத்தே மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்தில் நான்கு ராணுவத்தினரும், பட்டாரக வானில் பயணித்த ஒருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையின் விபத்து பிரிவில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நீதிபதி அபேயரத்னவை நியமிக்க ஒப்புதல்

கொழும்பு, டிசெ. 13

மேல் நீதிமன்ற நீதிபதி எம்.டி.எஸ்.அபேயரத்னவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்க அரசியலமைப்புச் சபை ஜனாதிபதிக்கு ஒப்புதல் வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் திபாலி விஜேயசுந்தர ஓய்வுபெற்றதை யடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர் வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடத்துக்கு மேல் நீதிமன்ற நீதிபதி எம்.டி.எஸ். அபேரத்னவை நியமிக்க அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலை ஜனாதிபதி கோத்தாபய கோரியிருந்தார். இந்த நிலையில் சபாநாயகர் கரு ஜயசூர்ய தலைமையில் நேற்றுக் கூடிய அரசியலமைப்புச் சபை ஜனாதிபதியின் பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்கியது. எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் நாடாளுமன்றால் உத்தியோகபூர்வமாக இடம்பெறாமையால் இன்றைய அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில் எதிர்ரக்கட்சித் தலைவர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ம)

## கருத்துச்...

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் நாட்டின் ஜனாதிபதியாக என்னை தெரிவு செய்துள்ளனர். அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் வினைத்திறனை அதிகரித்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பன அவற்றில் முக்கியமானவையாகும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு ஊடகங்களின் ஒத்துழைப்பு எனக்கு குறைவின்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுண்டு.

முதலீடு மற்றும் பொருளாதார தொடர்புகளை சர்வதேச ரீதியாக கட்டியெழுப்புவதற்கு நாட்டின் பிரதிமையை கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதாகும். எனவே நாட்டின் பிரதிமையை கட்டியெழுப்புவதிலும் ஊடகங்களுக்கு விரிவானதொரு பொறுப்பு உள்ளது.

கடந்த சில நாள்களாக பேசப்படும் சுவிஸ் தூதரக அதிகாரி ஒருவருடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் நாட்டின் ஊடகங்கள் நடந்துகொண்ட விதம் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. சர்வதேச ஊடகங்கள் தேவையற்ற வகையில் அந்த நிகழ்வை ஊதி பெருப்பிக்க மேற்கொண்ட முயற்சி குறித்து கவலையளிக்கிறது. அதனை சரி செய்யக்கூடிய இயலுமை எமது நாட்டு ஊடகங்களிடம் உள்ளது.

நகரங்களை அழகுபடுத்தும் வகையில் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுவரோவியம் வரையும் நடவடிக்கை எவரினதும் கோரிக்கையின்பேரில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று அல்ல. நாட்டை நேசிக்கும் இளைஞர்களிடையே உருவான ஆக்கத்திறன் சார்ந்த ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும் - என்றார். (ம)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.12.2019 வெற்றி வாரம் 2705 வர்ணம் கபிலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 14 17 36 56
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
13.12.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1629 சீட்டிழுப்பு திகதி 12.12.2019
வெற்றி இலக்கங்கள் 05 12 58 70 D
ரூ.42,520,824/=

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 819
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,814,890/-
சீட்டிழுப்பு திகதி: 2019.12.12
வெற்றி இலக்கங்கள் 08 31 49 59 K

## மணல்...

மாக மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த நபர்களை தாக்கி காயப்படுத்தியமை மற்றும் இரண்டு உழவு இயந்திரங்களை தீயிட்டு எரித்தமை தொடர்பாக ஆறு இளைஞர்கள் மீது ஊர்காவற்துறை பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டு அவர்கள் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் அனைவரையும் பிணையில் விடுவித்த நீதவான் இன்று முதல் தீவகத்தின் எந்த பகுதியிலும் மண் அகழ்வு நடவடிக்கையில் எவரேனும் ஈடுபடமுடியாதவாறு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தீவகம் வடக்கு, தெற்கு பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வழக்கைப் பார்வையிடுவதற்காக இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-104)

## பட்டம்...

ஜெகன் ஆனந்த் என்ற சிறுவனே அவ்வாறு உயிரிழந்தவனாவான்.



சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து குறித்த சிறுவன் நேற்று மாலை 5.30 மணிக்கு பட்டம் ஏற்றுவதற்காக பிள்ளையார் கோவில் தோட்டக் காணிக்குச் சென்றுள்ளான். நீண்ட நேரமாக சிறுவனைக் காணவில்லை என்று பெற்றோர் தேடிய போது குறித்த மாணவன் கிணற்றுக்குள் சடலமாக இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து சடலம் மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-173-26)

## கவனிப்பில்...

பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டமைக்கு எதிராக இடம்பெற்ற போராட்டம் அடிதடியில் முடிந்துள்ளது.

மறவன்புலவில் மக்கள் குடியிருப்புப் பகுதிக்கருகில் மின் காற்றாலை அமைக்கப்படுவதற்கு எதிராக மக்கள் போராட்டங்கள் பலவற்றை மேற்கொண்டதையடுத்து அதனை ஆராய்வதற்காக பணிகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தன.

அதற்கிடையில், மின் காற்றாலை அமைக்கும் பணிக்கான உபகரணங்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கனரக வாகனங்களில் கொண்டு வரப்பட்டிருந்ததோடு, மின் காற்றாலைக்கான அலுவலகம் அமைக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அதற்கு எதிராக மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டதோடு, பணிகளை இடைநிறுத்துமாறும் கோரினர். இதன்போது இருதரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டதோடு, ஆயுதங்களாலும் தாக்கிக் கொண்டனர்.

சம்பவத்தில் குறித்த பணிகளை முன்னெடுத்த நபர்களை மக்கள் தாக்கியதுடன், அவர்களது கூடாரத்தையும் அடித்து நொருக்கியுள்ளனர். அதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த சாவகச்சேரிப் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததோடு, பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

காற்றாலை அமைக்கும் பணியாளர்களே தம்மை முதலில் அச்சுறுத்தினர் என்று பொதுமக்கள் அங்கிருந்த செய்தியாளர்களுக்குத் தெரிவித்தனர். (ம-159)

## காய்ச்சலா...

சல் காரணமாக மருத்துவமனைகளுக்கு செல்லும் அனைவருக்கும் குருதிப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மருத்துவ மனைகளுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளது என்று தெரியவருகின்றது.

வடக்கில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தினந்தோறும் பலநூறு நோயாளர்கள் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றனர். இவ்வாறு செல்லும் அனைவருக்கும் குருதிப் பரிசோதனை கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். நோய் நிலமை (டெங்கின் தாக்கம்) அதிகரிக்காமல் இருக்க இந்த நடைமுறை அவசியம் என்றவாறாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## கமாலுக்கு...

பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'போர்க் குற்றவாளி கமல் குணரத்ன பாதுகாப்புச் செயலராக மீண்டும் அதிகாரத்துக்கு வந்துள்ளார். இது தமிழ் இனப்படுகொலையை தொடர்ந்து ஊக்குவிக்கும்' என்ற வாசகம் பொறிக்கபட்ட பதாகையை ஏந்தியிருந்ததுடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாட்டினது கொடிகளையும் ஏந்தியிருந்தனர். இவர்களது போராட்டம் நேற்றுடன் 1,027 நாள்களை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

## மீண்டும்...

தகடுகளை மூடிக் கட்டியவாறு, ஆறு பேர் கொண்ட கும்பல் சுதுமலை வடக்கில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்தது. வீட்டில் உள்ளவர்களை மிரட்டி உடமைகளை அடித்து நொறுக்கிவிட்டு அந்தக் கும்பல் தப்பித்துச் சென்றது. கைவிட்டுச்சென்ற மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டை வைத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்று இரவு நவாலியிலும் இதுபோன்றதொரு சம்பவம் இடம்பெற்றது. இதனால் ஆவா குழு மீண்டும் தலையெடுக்கிறதா என்று பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (21.26)



# ஹொங்கொங் பொலிஸுக்கு கற்பிப்பது இயலாத காரியம்!

## பின்வாங்கியது சீனா அனுப்பிய குழு



லண்டன், டிசெ.13

ஹொங்கொங்கில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களை நியாயமான நீதியான முறையில் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை ஹொங்கொங் பொலிஸாருக்குப் பயிற்சியளிக்கச் சென்ற சீனக் குழு தனது பணிகளை இடைநிறுத்தியுள்ளது.

ஹொங்கொங் பொலிஸார் சரியான புள்ளிவிவரங்களை முழுமையாக வழங்காதமையால் தமது பணிகளைச் சரியாக முன்னெடுக்க முடியவில்லை என்று அந்தக் குழு தெரிவித்துள்ளது.

ஹொங்கொங் கைதிகளைச் சீனாவிடம் ஒப்படைப்பது தொடர்பாகக் கொண்டு வரப்படவிருந்த சட்டத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

அந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதை ஹொங்கொங் அரசு பிற்போட்டுள்ளபோதும், தற்போது அரசு பதவி விலக வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு ஹொங்கொங் அரசு கடும்போக்கைக் கையாண்டது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பொலிஸாரின் தாக்குதலில் பொதுமக்கள் பலர் காயமடைந்ததுடன், உயிரிழந்த சம்பவங்களும் நடந்துள்ளன.

இந்தப் போராட்டங்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் கையாளும் வழிமுறைகள் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன.

அதைச் சமாளிப்பதற்காக சீன அரசு சர்வதேசக் குழு ஒன்றை ஹொங்கொங்குக்கு அனுப்பியிருந்தது. இந்தக் குழு மக்கள் போராட்டத்தை நீதியான நியாயமான முறையில் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் ஹொங்கொங் பொலிஸாருக்குப் பயிற்றுவிக்கும் என்று கூறப்பட்டது.

ஹொங்கொங் பொலிஸார் இந்தப் பிரச்சினை தொடர்பான புள்ளிவிவரங்களை முழுமையாக அளிக்காதமையால் தங்களால் இந்த விடயத்தில் முழுமையாக ஈடுபட முடியாதுள்ளது என்றும், அங்குள்ள பிரச்சினையின் உண்மைத் தன்மையை அறிய முடியாது என்றும் தெரிவித்து அந்தக் குழு தனது பணிகளை இடைநிறுத்தியுள்ளது.

இது சீன அரசுக்குப் பின்னடைவான விடயம் என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஏ)

## நோபல் பரிசு: வேட்டி, சேலையில் அசத்திய தம்பதியர்

ஒஸ்லோ, டிசெ. 13

மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம், இரசாயனவியல் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை படைத்தவர்களுக்கு வருடாந்தம் நோபல் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டு பொருளாதாரத்துறைக்கான நோபல் பரிசு சுவீடன் தலைநகர் ஸ்டோக் ஹோமில் ஒக்ரோபர் 11ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

வறுமையை ஒழிப்பதற்கான முன்னோடித் திட்டங்களை வகுத்த பொருளியல் நிபு ணர்களான கொல்கத்தாவைச் சேர்ந்த அபிஜித் பானர்ஜி, அவரது மனைவி எஸ்தர் டூஃப்லோ மற்றும் மைக்கேல் கிரீமர் ஆகியோர் இந்த ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

நோபல் விருது வழங்கும் நிகழ்ச்சி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற அபிஜித் பானர்ஜி மற்றும் அவரது மனைவி எஸ்தர் டூஃப்லோ தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி மற்றும் சேலையில் நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டனர். (ஒ.5)





# வில்லன்

வொஷிங்டன், டிசெ. 13

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது அரசியல் எதிரியான ஜனநாயகக் கட்சியை சேர்ந்த முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் மீது உக்ரைனில் விசாரணை நடத்த அந்த நாட்டுக்கு அழுத்தம் கொடுத்தார் எனக் கூறப்படும் விவகாரம் பூதாகரமாக வெடித்து வருகிறது.

இது தொடர்பாக ட்ரம்ப் மீது பதவி நீக்க விசாரணை நடத்தி வரும் அமெரிக்க நாடாளுமன்ற புலனாய்வுக் குழு அவர் மீதான குற்றச்சாட்டுக்களை வெளியிட்டுள்ளது. ட்ரம்ப், ஆரம்பத்தில் இருந்து இந்தப் பதவி நீக்க விசாரணையை கடுமையாக விமர்சித்து வருகிறார்.

பதவி நீக்க விசாரணையை நடத்தி வரும் ஜனநாயகக் கட்சியினரை அச்சுறுத்தும் வகையில், ஜனாதிபதி ட்ரம்பை, ஹொலிவுட் திரைப்படமான 'அவெஞ்சர்ஸ்' படத்தின் வில்லன் தானோஸ் போல் சித்திரித்து, ட்ரம்பின் பரப்புரைக் குழு வீடியோவை டுவிட்டரில் வெளியிட்டுள்ளது. தானோஸ் உருவில் இருக்கும் ட்ரம்ப் 'நான் தவிர்க்க முடியாதவன்' என கூறிவிட்டு சொடக்குப் போடுகிறார்.

அவெஞ்சர்ஸ் படத்தில் வில்லன் தானோஸ் ஒரு சொடக்கில் உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் அரைவாசியை அழித்துவிடுவார். அதே போல் டிரம்ப் நினைத்தால் ஒரு சொடக்கில் ஜனநாயக கட்சியின் விசாரணையை ஒன்றும் இல்லாமல் செய்துவிடுவார் என்பதை மறைமுகமாக குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5)



## இன்றைய நாள்

**மேடம்:** பொது இடங்களில் நிதானித்து பேச வேண்டும். தொழிலில் இடையூறை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். சுமாரான அளவில் பண வரவு கிடைக்கும். உணவு உண்பதில் கட்டுப்பாடு அவசியம்.

**இடபம்:** நண்பர்களின் உதவியால் அதிக நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் வளர்ச்சி உருவாகும். ஆதாய பண வரவில் சேமிப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்ப உறுப்பினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிகம் பணி புரிவீர்கள். தாராள பண வரவில் புத்திரர் விரும்பிய பொருள்கள் வாங்கி தருவீர்கள்.

**கடகம்:** உங்கள் திறமையை பலரும் அறிய அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்றம் செய்வீர்கள். தாராள பண வரவு கிடைக்கும். குடும்பத்தில சுப நிகழ்வு ஏற்படும்.

**சிம்மம்:** பழகுபவர்களிடம் வசீகரமாக பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனதில் பெருமிதம் உருவாகும். உபரி பண வருமானம் கிடைக்கும். தாயின் அன்பு, ஆசி மனதில் ஊக்கம் தரும்.

**கன்னி:** சிலர் உங்களை ஏளனமாக பேசுவர். சூழ்நிலை உணர்ந்து விலகுங்கள். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணி அதிகரிக்கும். பணச் செலவில் சிக்கனம் சிரமம் தவிர்க்கும்.

**துலாம்:** நண்பர்களிடம் அதிருப்தி வராமல் பழகவும். தொழில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம்.

**விருச்சிகம்:** பெரியவர்களின் வழிகாட்டு தல் வெற்றிக்கு துணை நிற்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**தனுசு:** கடந்த கால இனிய நினைவுகள் புத்துணர்வு தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பண வரவில் லாப விகிதம் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் இனம் புரியாத கவலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமையை பின்பற்றுவது அவசியம். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** உங்களின் அந்தஸ்துக்கு சோதனை வரலாம். பகைவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணி புரிவீர்கள்.

**மீனம்:** உறவினர்களிடம் உங்கள் மீதான நல்ல அபிப்பிராயம் வளரும். தொழில், வியாபார வளர்ச்சியில் உயர்ந்த இலக்கை அடைவீர்கள். ஆதாய பண வரவு கிடைக்கும்.

**பணியாளர் தேவை**
வீட்டுப் பணிக்கு பெண் உதவியாளர்/ பணியாளர் தேவை.
077 222 3132

**கனடா - உயர் கல்வி**
கனடாவில் வேலையுடன்
பல்கலைக்கழக / உயர் கல்வி கற்க
ஓர் அரிய வாய்ப்பு
O/L உடன் ஆங்கிலம் அவசியம்,
IELTS இல்லை.
உங்கள் CV/BIO - DATA
உடன் தொடர்புகொள்ளுங்கள்
M: 078 817 1413
E: sicsolutions@hotmail.com

# கிறிஸ்மஸ் போனஸ் எவ்வளவு தெரியுமா?

ஒஸ்லோ, டிசெ. 13

அமெரிக்காவில் உள்ள நிறுவனம் தனது பணியாளர்கள் அனைவருக்கும் ஒரு கோடி டொலர்களை கிறிஸ்மஸ் போனஸாகக் கொடுத்துள்ளது.



அந்த நிறுவனத்தின் தலைவர், நாம் பெரிய இலக்கான 20 மில்லியன் சதுர அடி இடத்தில் வளர்ச்சிச் சாதனையை நிகழ்த்தியுள் ளோம்- என்றார்.

இலக்குகளை எட்டியதற்காக கிறிஸ்மஸ் இரவு விருந்துடன், அதே தினத்தில் ஒவ்வொரு ஊழியருக்கும் கொடுக்கப்பட்ட சிவப்பு கடித உறையில் இவ்வளவு பெரும் தொகை இருக்கும் என்று ஊழியர்கள் எதிர்பார்க்கவில்லை.

ஒவ்வொரு பணியாளருக்கும் பணி அனுபவம் அடிப்படையில் போனஸ் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதில் புதிதாக வேலைக்குச் சேர்ந்து இன்னும் பணியையே தொடங்காதவருக்கு 100 டொலர்கள் போனஸ் தொகை உட்பட அதிகபட்ச தொகையாக 2 லட்சத்து 70 ஆயிரம் டொலர்கள் வரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் வீடியோவில் ஊழியர்கள் மகிழ்ச்சியில் குதியாட்டம் போட்டது பதிவாகியுள்ளது. இது தொடர்பாக நிறுவனத்தின் தலைவர் லோரன்ஸ் மேக்கிராண்ட்ஸ், பணியாளர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு எனது நன்றி. இதை விட அதனைப் பெரிதாக என்னால் தெரிவிக்க முடியாது. படகைசெலுத்துபவனாக நான் இருக்கலாம். ஆனால் அவர்கள் தான் படகோட்டிகள். இந்த ஊழியர்கள் இல்லாமல் நாங்கள் ஒன்றுமில்லை, - என்றார். (ஒ.5)

**13 ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்
(முன்னாள் ஆசிரியர்,
யா/ மிருசுவில்
அ.த.க. பாடசாலை)
வையத்தின் மைந்தனாக
16.08.1963
தெய்வத்தின் சொந்தமாக
06.12.2006
திதி: கார்த்திகை மாத
அபரபக்கதுதியை
(13.12.2019)

எம் வாழ்வின் ஒளி விளக்கே !
தேனொக்கும் வாழ்வளித்த
தெய்வத்தின் திருவுருவே !
ஓடி மறைந்தது பதின்மூன்று ஆண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம்முன் இறையாகி நல்லனவே நந்திடுவீர்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

நாவற்காடு,
வரணி.
உங்கள் பிரிவால் துயருறும்
அன்பான மனைவி திலகவதி
மற்றும் குடும்பத்தினர்.
(in 433) (13)

# ரஷ்யாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

வொஷிங்டன், டிசெ. 13

அமெரிக்காவில் கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாகவும், ட்ரம்பை வெற்றியடையச் செய்ய ரஷ்ய அதிகாரிகள் உதவினர் எனவும் குற்றச்சாட்டு எழுந்திருந்தது. இந்த விவகாரம் அமெரிக்க அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியது.

இந்த முறைப்பாடு தொடர்பாக ரொபர்ட் முல்லர் தலைமையிலான விசாரணைக்குழு 2 ஆண்டுகள் விசாரணை நடத்தி கடந்த ஏப்ரல் மாதம் அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது. அதில், ஜனாதிபதித் தேர்தலின் போது, ட்ரம்போ அவரது பரப்புரைக் குழுவை சேர்ந்தவர்களோ ரஷ்யாவுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தலையிடக்கூடாது என்று ரஷ்யாவுக்கு ஜனாதிபதி ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கடந்த செவ்வாய்க்கிழமை, வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், செர்ஜி லாவ்ரோவுடன், உக்ரைன் விவகாரம் உள்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்திய ஜனாதிபதி ட்ரம்ப், அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தலையிடுவதற்கு ரஷ்யா எந்தவொரு முயற்சிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று கடுமையாக எச்சரித்தார், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ட்ரம்புடனான சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த செர்ஜி லாவ்ரோவ், தேர்தல் குறித்து எந்த விவாதமும் நடத்தவில்லை என்று கூறினார். (ஒ,5)



# பனி படர்ந்த வீதியால் 50 வாகனங்கள் விபத்து

நியூயோர்க், டிசெ.13

அமெரிக்காவின் ஐஓவா மாகாணத்தில் நிலவும் கடும் பனிப்பொழிவால் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. அந்த மாகாணத்தில் அல்டோனா மற்றும் மேற்கு மிக்ஸ்மாஸ்டர் பிரதேசங்களை இணைக்கும் நெடுஞ்சாலையில் இந்த விபத்து நடந்துள்ளது.

கடும் பனிப்பொழிவால் வீதி மூடப்பட்டுள்ள நிலையில் வாகனங்களைச் செலுத்துவதில் சாரதிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வீதி சறுக்குவதால் வாகனங்கள் கட்டுப்பாடு இழந்து இந்த விபத்து நடந்துள்ளது என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் சிலர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்தை அடுத்து இந்த நெடுஞ்சாலை பல மணி நேரம் மூடப்பட்டது. (எ)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



கடந்த 11.11.2019
திங்கட்கிழமை சிவபதம்
அடைந்த குடும்பத்
தெய்வம்
அமரர் திருமதி
கதிர்காமத்தம்பி
நாகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.12.2019 செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.
ஆத்மசாந்தி வழிபாடும் மதியபோசன நிகழ்வும் நாளை (14.12.2019) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பன்னாலை ஸ்ரீ வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
குடும்பத்தினர்.

**கிருஷ்ணா அடகு சேவை**
பதிவு இல.: J/DS/BR 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில்
2019 ஆம் ஆண்டு முன்பும் 31.05.2019 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2020) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2020 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
குறிப்பு: 2019 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.
உரிமையாளர்: A.S.Surendran.

இல.370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046
(in 11938) (13.17)





# பளு தூக்கலில் பதக்கம் வென்ற ஆசிகாவுக்கு மகத்தான வரவேற்பு


யாழ்ப்பாணம், டிசெ.13
காத்மண்டுவில் நடைபெற்ற 13ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான பளுதுக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வடக்கின் இரும்புப் பெண் என்று அழைக்கப்படுகின்ற யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி ஆசிகாவுக்கு யாழ்.மாவட்ட பளு தூக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மதிப்பளிக்கப்பட்டார்.

முன்னாதாக யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை வீதியூடாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கு வரை அழைத்து வரப்பட்டு கஜேந்திரன் தலைமையில் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் ஆனல்ட், வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் குருபரன், யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி விஜிதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி போதனாசிரியர் திருமாறன், ஓய்வு பெற்ற யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் சண் தயாளன், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் யாழ்.மாவட்ட பளு தூக்கல் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)



# வேம்படி மகளிர் அணி மகுடம் சூடியது





யாழ்ப்பாணம், டிசெ.13
இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி கிண்ணம் வென்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 36:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி மோதியது. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணி 24:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (23)



கூடைப்பந்தாட்டப் போட்டியில்


# யாழ். இந்துக்கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது



யாழ்ப்பாணம், டிசெ.13
இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வடக்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை கூடைப்பந்தாட்டத்திடலில் நேற்று வியாழக்கிழமை மாலை 5மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது .இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 55:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி மோதியது. இதில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி 37:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (23)




# மழையால் பாதிக்கப்படும் பாக். - இலங்கை டெஸ்ட்

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது. அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. தனஞ்சய டி சில்வா 38 ஓட்டங்களுடனும், டிக்வெல 11 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். போட்டி ஆரம்பித்த முதல் நாளே மழை குறுக்கிட்டதால் போட்டி 66 பந்துப் பரிமாற்றங்களில் நிறுத்தப்பட்து. கடும் பனிமூட்டம் நிலவியதால் போட்டியின் பெரும்பகுதி ஆட்ட நேரம் மின்னொளியிலேயே விளையாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



நேற்றைய நாளிலும் இதே காலநிலைதான் காணப்பட்டது. இருந்தும் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. டிக்வெல, தனஞ்செய மிக நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். போட்டி ஆரம்பித்த 7.5 பந்துப்பரிமாற்றங்களில் மழை குறுக்கீடு செய்ததால் போட்டி இடைநிறுத்தப்பட்டு நீண்ட நேரங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே மீண்டும் மழை குறுக்கிட்டதால் போட்டி நிறுத்தப்பட்டது. அப்போது இலங்கை அணி 6 இலக்குகளை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. டிக்வெல 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தனஞ்செய 72 ஓட்டங்களுடனும், குசல் பெரேரா 2 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.



## ரி– 20 தரவரிசையில் கோக்லி முன்னேற்றம்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ரி-20 தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய விராட் கோக்லி, மீண்டும் தரவரிசையில் 10 இடத்துக்குள் முன்னேறியுள்ளார்.

இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி 3 வகை கிரிக்கெட்டின் துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் முதல் 10 இடத்துக்குள் இருந்தார். சமீப காலமாக அவருக்கு ரி-20 தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் ரி-20 துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் முதல் இடத்துக்குள் இருந்து வெளியேறினார். இந்த நிலையில் தற்போது முடிந்து மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு எதிரான ரி-20 தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

முதல் போட்டியிலும், 3ஆவது போட்டியிலும் அரைச்சதம் அடித்த கோக்லி இரண்டிலும் ஆட்டமிழக்காமல் இருந்தார். மூன்று போட்டிகளிலும் 183 ஓட்டங்கள்ளக் குவித்தார். இதனால் ஐசிசி ரி-20 துடுப்பாட்ட வீரர் தரவரிசையில் 15ஆவது இடத்திலிருந்து 10ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

கால்பந்தாட்ட

## மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், டிசெ.13

கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வகுப்பு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி நிலையத்தில் நடைபெறும். எனவே அனைத்து கால் பந்தாட்ட மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (23)


# முதல் நாளில் ஆஸி. திணறல்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் லாபஸ்சாக்னேயின் சதத்தால் ஆஸ்திரேலியா 4 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான பகல் இரவு டெஸ்ட் போட்டி பேர்த்தில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், பேர்ன்ஸ் களமிறங்கினர். இருவரும் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்த முற்பட்ட போதிலும் அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் முதலாவது இலக்கைப் பறிகொடுத்தது. பேர்ன்ஸ் 9 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் லாபஸ்சாக்னே. அவர் வோர்னருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைக் குவித்தார். வோர்னர் 43 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் போது அவர் முச் சதம் விளாசியிருந்தமை குறிப்பிடத்தது. மறுமுனையில் லாபஸ்சாக்னே தனிகாட்டு ராஜவாகப் அடித்தாட ஆரம்பித்தார். சிமித்தும் களமிறங்கி சிறிது நேரம் தாக்குப் பிடித்து 43 ஓட்டங்களுடன் அவரும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

ஒரு பக்கம் இலக்குகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் லாபஸ்சாக்னே சிறப்பாக விளையாடி சதம் கடந்தார். பாகிஸ்தானுக்கு எதிராக இரண்டு டெஸ்டிலும் சதம் அடித்த அவர், இந்த போட்டியிலும் சதம் அடித்ததன் மூலம் தொடர்ச்சியாக மூன்று டெஸ்டில் சதம் விளாசிய பெருமையப்பெற்றார். அணி நேற்றைய நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது. லாபஸ்சாக்னே 110 ஓட்டங்களுடனும், டிராவிஸ் ஹெட் 20 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் வக்னர் 2 இலக்குகளையும், சவுத்தி, கிராண்ஸ்ஹோம் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.



## துரித தபால்கள் பொதிகள் சேவை

ஏனிலும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK - 525/= | TCN EXPRESS |
| Germany - 625/= | கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, |
| Australia - 850/= | நெல்லியடி. |
| Swiss - 850/= | Hotline - 077 755 4528 |

## Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2022 தொழில்நுட்ப பிரிவு
விரைவில் ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

நவீன ஆய்வுகூட வசதிகளுடன் A/L 2022 மாணவர்களுக்கான அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு - 077 017 5346, 077 170 3549

## DMI
JAFFNA

கலை | வர்த்தகம் | தொழில்நுட்பம்

A/L - 2022

ஜனவரி 04
காலை 9.00 மணி

SLAS
Open & Limited

உமாசங்கர்& வளவாளர்கள் மீட்டல் கருத்தரங்கு தொடர் 08
- கிரகித்தல் - பௌநந்தி
- நுண்ணறிவு - நவநீதன்

14.12.2019 சனி
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.

NEC கல்வி நிறுவனம்
076 166 1986, 077 741 7143

E,S Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8023 17, Kandy Road, Jaffna

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள்
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
3). விநியோக ஊழியர்கள் (இரவு, பகல்)

தகுதியானவர்கள் எதிர்வரும் 17.12.2019 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும். முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**திருமதி ஏஞ்சலின் கலாநிதி மகேந்திரக்குமார்** (Kala Miss)

(இளைப்பாறிய ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி,
முன்னாள் ஆசிரியை, யாழ். மத்தியகல்லூரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏஞ்சலின் கலாநிதி மகேந்திரக்குமார் (Kala Miss) கடந்த (10.12.2019) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - செல்வரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தவமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் பெஞ்சமின் மகேந்திரக்குமார் (சுனா -Retired Manager, Jaipur Foot Program) அவர்களின் அன்பு மனைவியும், மெலனி மதுமிதா (Sydney), ஹெலன் லாவண்யா (Uduvil Girls` College) ஆகியோரின் அருமைத்தாயாரும் Dr. செல்வேந்திரன் (Australia), A.H ஞானராஜன் (St.John`s College) ஆகியோரின் அன்பு மாமியாரும், கேபஸ், எஸ்தர், எலைஜா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், மாதி (London), வசந்தி (Colombo), சுகந்தி (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.12.2019) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு Church Lane உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 225 6048

தகவல்: குடும்பத்தினர்.

SLAS
கருத்தரங்கு
14.12.2019 சனி
9AM
P.கமல்தாசன்
பொதுவிவேகம்
உலகளாவிய போக்குகள்
மதிப்பீட்டுடன்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி

SLAS
Open & Limited
உமாசங்கர்& வளவாளர்கள் மீட்டல் கருத்தரங்கு தொடர் 09
- பொதுஅறிவு
- நுண்ணறிவு } உமாசங்கர்
- முகா.உளச்சார்பு
- விடய ஆய்வு - சிவராசா

15.12.2019 ஞாயிறு
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
076 166 1986, 077 741 7143

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLAS
சனி (14/12) 9-12 IQ & GK
தவசேகர்
12.30 - 3.30
ஆக்கபூர்வமான பகுப்பாய்வு
பௌநந்தி
ஞாயிறு (15/12)
9-12.30 IQ & GK
தவசேகர்
பாலசந்திரமூர்த்தி
1-3.30
விடய ஆய்வு
கலைசெல்வன்
முகா - உளச்சார்பு
கருணாநாதன்
SLACS
சனி, ஞாயிறு 9.00-4.00
M.A /D.O EB Exam
ஞாயிறு 9.00 - 3.00
புகையிரத பாதுகாவலர்
சனி, ஞாயிறு
9.00-2.00
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்-ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100 m தூரத்தில்)

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

2022 A/L கணித, உயிரியல் பிரிவுகள்

| தமிழ் மொழி மூலம் | English Medium |
|---|---|
| பௌதீகவியல்<br>திரு. R. குமரன், திரு. R.குகன் | Physics<br>Mr.R.Kumaran |
| இரசாயனவியல்<br>திரு. டயஸ், திரு. K.T.சிவகுமார் | Chemistry<br>Mr. Dias |
| உயிரியல்<br>திரு.N.T. கஜேந்திரன் | Biology<br>Mr.N.T. Gajenthiran |
| இணைந்த கணிதம்<br>திரு.S. செந்தில்ராஜ் | Com.Maths<br>Mr.S. Krishna |

14.12.2019 (சனிக்கிழமை) 3.30Pm முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்
T.P - 077 336 4055, 021 221 6690

(Navalar Road- Brown Road Junction, Jaffna)

CS12512(16/17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021493 1111



**Farewell to our Colleague and Teacher**

**"Grief is the prize, we pay for Love"–**
**Queen Elizabeth II**

Our homage to our mentor, late Mrs.Kalanithy Mahendrakumar former Junior Secondary Supervisor a veteran pianist. She was a pillar of strength to the school community. Our sincere sympathies to the family members.

**The principal, Staff & Pupils,**
**Uduvil Girls' College.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.